
# வீரசங்கிலியன்

## பாகம் 1



சொல்லேருழவர்
ம.க.அ. அந்தனிசில்

பதிப்பாசிரியர்
முருகேசு கௌரிகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசங்கிலியன்

## பாகம் 1



சொல்லேருழவர்

ம.க.அ. அந்தனிசில்

பதிப்பாசிரியர்

முருகேசு கௌரிகாந்தன்

முதுநிலை விரிவுரையாளர்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பெயர் : வீரசங்கிலியன்

நூலாசிரியர் : ம.க.அ. அந்தனிசில்

பதிப்பாசிரியர் : முருகேசு கௌரிகாந்தன்

பதிப்பு : 2017, செப்ரெம்பர், 11.

வெளியீடு : கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Title : Veerasankiliyan

Author : M.K.A. Anthonysil

Edited by : M. Gowrikanthan

Edition : 2017, September, 11.

Publisher : Harikanan (Pvt) Ltd.
*No. 681, K.K.S. Road,*
*Jaffna.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அணிந்துரை

2. பதிப்புரை

3. வீரசங்கிலியன் வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் 'ஏழாம் பரராசசேகர மன்னன்' என்று அழைக்கப்படும் சங்கிலி மன்னனுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பிருக்கின்றது என்ற உண்மை பலரறியாதது. போர்த்துக்கேயர் நல்லூர் மீது படையெடுத்த போது சங்கிலி மன்னன் கோப்பாயிலேதான் கோட்டையமைத்துத் தங்கியிருந்தான். காரணம் எதுவுமின்றி இங்கே வந்திருக்க மாட்டான். கோப்பாயில் இருந்த கோட்டை பற்றி கட்டடக்கலைஞர் வ.ந. நவதரன் எழுதியிருக்கின்றார். எங்கள் வளாகத்தில் இருக்கும் வயிரவப் பெருமானையும் சங்கிலியன் வழிபட்டடான் என்பது ஐதீகம். சங்கிலி மன்னனுடைய செயற்பாடுகளில் பெரும்பாலானவற்றை எதிர் மறைப்பொருள் கொண்ட வகையில் தான் பல வரலாற்றாசிரியர்கள் எழுதியிருக்கின்றார்கள். உள்நோக்கங்களைக் கொண்டதாலேயே அவ்வாறு அவர்கள் எழுதினர் என்கின்ற உண்மை அந்தனிசில் அவர்கள் 'வீரசங்கிலியன்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதிய பின்னர் தான் உலகுக்குத் தெரியவந்தது. எங்கள் கல்லூரி மைதானத்திற்கு "வீரசங்கிலியன் மைதானம்" என்று பெயர் வைக்கப்பட்டதற்கு அந்தனிசிலின் வீரசங்கிலியன் கட்டுரையின் செல்வாக்கும் ஒரு காரணம்.

இந்த அருமையான ஆராய்ச்சிக் கட்டுரையினை, சங்கிலியன் வரலாற்றினை எழுதிய பலர் உசாத்துணையாகக்கூடக் காட்டாதது இருட்டடிப்புத்தான். இந்நிலையில் அந்தனிசில் அவர்கள் மீதும், சங்கிலியன் மீதும், வரலாற்றின் உண்மைத்தன்மையிலும் ஆர்வங்கொண்டுஎமதுகல்லூரியின்முதுநிலைவிரிவுரையாளர்முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் தமக்குக்கிடைத்த கட்டுரைகளைத் தொகுத்து, இந்தப் பெறுமதியான நூலை அந்தனிசில் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் அனுமதியுடன் வெளியீடு செய்தமையினைப் பாராட்டுகின்றேன். இதனைத் தமது செலவில் பதிப்பித்த கரிகணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தனியார்) நிறுவன உரிமையாளர் திரு. சிவஞானசுந்தரம் ராஜ்குமார் அவர்களின் தமிழ்ப்பற்றையும், பிரதேசப்பற்றையும் மதிக்கின்றேன். அவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். எங்கள் தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழாவின் போது நூல் வெளிவருகின்ற காரணத்தினால் தமிழ் வரலாற்றறிஞர்களும் ஆய்வாளர்களும் ஏனையோரும் படித்துப் பயன்பெறுவதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இம்முயற்சியில் சம்பந்தப்பட்ட அமரர் அந்தனிசில், திருவாளர்கள் கௌரிகாந்தன், ராஜ்குமார் ஆகியோரை மீண்டும் பாராட்டி அமைகின்றேன்.

**சதாசிவம் அமிர்தலிங்கம்,**
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இந்த நூலின் ஆசிரியரான ம.க.அ. அந்தனிசில் (31.12.1934 - 09.07.2005) அவர்கள் நாங்கள் வாழும் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த வரலாற்றுச் சிந்தனையாளர்களுள் ஒருவர். ஆற்றல்மிக்க பேச்சாளர், எழுத்தாளர். நாம் வாழுங்காலத்தில் தமிழர் வரலாற்றில் தொடர்பாக மிகுந்த கரிசனையும் கண்ணும் கருத்துமாக இருந்தவர். வரலாறு சரியாகவும் நேர்மையாகவும், துணிச்சலுடனும் எழுதப்பட வேண்டும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு உழைத்த பெருமகன். அவரது அரியதும் பெரியதுமான முயற்சிகள் காலவெள்ளத்தில் அழிந்து போகக்கூடாது என்பதன் விளைவுதான் அவருடைய வீரசங்கிலியன் பாகம் 1 என்ற இந்த நூலாகும். யாம் அறிந்தவகையில் இவரது ஒரு நூல், 'வத்திக்கான் போப் முதல் வடக்கன் பாதிரிவரை' என்பது. இது தமிழகத்தில் இவர் 'நாத்திகம்' என்ற பத்திரிகையின் துணையாசிரியராக இருந்த போது தொடர் கட்டுரையாக இவரால் எழுதப்பட்டவை பின்னர் நூலாக வெளிவந்ததாக அறிகிறோம். 'வீரசங்கிலியன்' எனும் தலைப்பில் ஈழநாடு பத்திரிகையில், 1979 ஆம் ஆண்டு தொடர்கட்டுரையாக எழுதப்பெற்றவை எம்மால் அரிதின் முயன்று தொகுக்கப்பட்டு, தற்போது நூலாக வெளிவந்துள்ளது. "சங்கிலி அரண்மனை பாதுகாக்கப்படுமா?" (ஈழநாடு 04.10.1979) எனும் கட்டுரை பயன்கருதிப் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சங்கிலி மன்னன் ஆட்சிபீடம் ஏறியது வரையான வரலாறு இந்நூலில் உள்ளது. இது ஈழநாடு பத்திரிகையிலே ஆறு வாரங்களில் (21.10.1979, 28.10.1979, 04.11.1979, 11.11.1979, 18.11.1979, 16.12.1979) ஆறு பகுதிகளாக வெளி வந்தது. ஆறாவது பகுதியில் "சங்கிலி மன்னனின் ஆட்சி நிர்வாகம் எப்படியிருந்ததென்பதை அடுத்த வாரமலரில் காண்க." என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிடப்பட்டபடி வரவில்லை. ஏன் வரவில்லையென்று தெரியவில்லை. எழுதக்கூடாதென்று அவருக்கு ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்கள் காரணமாக வரவில்லையோ தெரியவில்லை. கட்டுரை வராமல் நின்ற சமயத்தில்கூட, தொடர்ந்து ஏன் உரிய கட்டுரை வெளிவரவில்லையென்று கூட யாராவது கேட்டெழுதியதாகவும் தெரியவில்லை. "எதார்த்தவாதி வெகுசனவிரோதி" என்பதாலா என்று கூடத்தெரியவில்லை. எவ்வாறிருப்பினும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாமல் கையெழுத்துப் பிரதியாகக்கூட பிற்பகுதி யாரிடமாவது இருந்தால், அவற்றை அவர்கள் கொடுத்துதவினால் இரண்டாம் பாகமாகவும் பதிப்பிக்க முடியும்.

இனி, இந்த நூற்பகுதியின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாகவாயினும் தெரிவிப்பது பொருத்தமென்று எண்ணுகின்றோம். நாங்கள் க.பொ.த உயர்தரம் கற்ற **1979** ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் தமிழ்ப்பாடத்துக்குரிய ஒரு பாடநூலாகப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை *(1902 - 1968)* அவர்களின் 'சங்கிலி' *(1956)* எனும் நாடக நூல் பாடநூலாக இருந்தது. உண்மையும் கற்பனையும் கலந்து நாடக இலக்கியங்கள் எழுதப்படுகின்ற காரணத்தால் உண்மையானதொரு சரித்திர நூலை வாசிப்பதற்காகத் தேடியலைந்த அந்தக் காலகட்டத்தில் அந்தனிசில் அவர்களின் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தமை பெரும் வரப்பிரசாதமாகவே எமக்கு அமைந்தன. போர்த்துக்கேயர் எங்கள் நலனுக்காக இங்கு வரவில்லை. அவர்கள் சொன்னதை அந்தனிசில் அவர்களுக்கு முன்னம் பலர் எழுதினர். இவ்வகையில் மாதகல் மயில்வாகனப்புலவர் *(1779 -1816)* எழுதிய யாழ்ப்பாணவைபவமாலை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை *(1858 - 1917)* எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் முதலான நூல்களைச் சரி, பிழை கண்டறிய வாசிக்கலாம். இவர்களைப் போல அந்தனிசில் எழுதவில்லையென்பதினை இந்த நூலை வாசிக்கும் போது தெரிய வரும்.

சங்கிலி மன்னன் மீது வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் மூன்று எமது அவதானத்துக்குரியது. அவை :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலியன் தான் ஆட்சிடமேறுவதற்காகத் தனது ஒன்றுவிட்ட சகோதரர்களாகிய இரண்டு அரசகுமாரர்களைக் கொன்றமை, தவறான வழியில் ஆட்சிப்பீடமேறியமை, மன்னார்ப்படுகொலை. அந்தனிசில் அவர்களின் இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூலில் முன்னைய இரண்டும் பிழையான கற்பிதங்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாதவகையில் ஆராய்ந்து எழுதியிருக்கின்றார். ஆனால் துரதிஷ்டவசமாக தொடர்ச்சி வெளிவராத காரணத்தால் மன்னார்ப் படுகொலை பற்றி என்ன சொல்கிறார் என்று அறிய முடியவில்லை. தமது கட்டுரையில் சங்கிலியன் மீது தவறான வதந்தி அல்லது பிழையான காரணங்களைச் சுமத்தியிருக்கிறார்கள் என்று காட்டுவதனை வைத்துப் பார்க்கும் போது மன்னார்ப் படுகொலைகளைச் சங்கிலி மன்னன் செய்விக்கவில்லை என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. சங்கிலி மன்னனை அந்தனிசில் "வீரசங்கிலியன்" என்று எழுதியதையும் போர்த்துக்கேயரினது குறிப்புக்களை 'நாடுபிடிக்க வந்தோரின் பாபக் குறிப்புகள்' என்றும் எழுதியதையும் எவர் மறுத்தார் இன்றுவரை?

அந்தனிசில் அவர்கள் எழுதிய முதற்கட்டுரை வெளிவருவதற்கு முதல் வாரம் (14.10.1979) அந்தனிசில் அவர்களால் ஈழநாடு பத்திரிகையில் "வீரசங்கிலியன்" என்ற தலைப்பில் எழுதப்பெற்ற **வியாபாரம் என்று வந்து நாடுபிடிக்கத் திட்டம் தீட்டிய வெள்ளைப் பறங்கியர் மீது பாய்ந்து செருக்களத்திலே தோற்கடித்த சங்கிலி மன்னனுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சூழ்ச்சிகளும், சதிகளும் இக்கட்டுரையில் அம்பலமாக்கப்படுகின்றன. சரித்திரம் என்ற போர்வையில் சங்கிலி மன்னனின் பெயருக்குக் களங்கம் கற்பித்து எழுதிய சூத்திரதாரிகளையும் இனங்காண்பிக்கின்றது இக்கட்டுரை. தேசபக்தனும், அஞ்சாநெஞ்சனும், மாவீரனுமாகிய சங்கிலி மன்னன் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கத்தை இதுவரை யாரும் அலசி ஆராய்ந்து துடைத்தெறிய முயற்சிக்கவில்லை. இக்கட்டுரை அப்புனித பணியைச் செய்கிறது. சங்கிலி மன்னனைக் கொலைகாரனென்றும், பெண்கள்ளனென்றும், பட்டாபிஷேகமின்றி ஆட்சிபீடமேறியவன் என்றும் குற்றஞ்சுமத்தினார்கள் பறங்கியரும் அவர்களின் அடிவருடிகளும். அதாவது குற்றவாளிகளே நீதிபதிகளாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாறினார்கள். இவையனைத்தையும் தனக்கே உரித்தான பாணியில் விமர்சிக்கிறார் 'தீப்பொறி' ஆசிரியர். கற்றோரும் மற்றோரும் எல்லோரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை இதுவாகும்.** எனும் குறிப்பு மிக முக்கியமானதொன்று.

இதற்குமேல் இந்த நூலின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெளிவுபடுத்துவதற்கு எதுவுமில்லை.

"காலத்தினால் செய்த நன்றி ...." என்பது போல இறுதி நேரத்தில் இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளிற் பெரும்பகுதியை அனுப்பிவைத்த இல. 100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் உள்ள நூலக நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி மியூறி கஜேந்திரன் அவர்கட்கும் நூலாக வெளிக்கொண்டுவரத் தம்மிடமிருந்த சில ஆவணங்களையும் தந்து, வெளியிட அனுமதியளித்த திருமதி கல்யாணி அந்தனிசில், பிள்ளைகளான கவிதா, யாழினி, ராஜ்குமார் ஆகியோருக்கும் 'சகோதரி திருமதி ஜசிந்தா பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும், இவ்வாறான தமிழ்ப்பணிகளுக்கு ஆதரவு நல்கிவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு. சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கட்கும், இணைப்பாளர் நண்பர் பா. பாலகணேசன் அவர்கட்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள்.

இந்த நூலில் உள்ள கட்டுரைத்தொடர்களைக் காண்பித்து இவற்றை நூலாகக் கொண்டுவருவதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டமாத்திரத்தில் எவ்வித மறுப்பும் இன்றித் தமது பதிப்பாக வெளியிடத் துணைநின்ற யாழ்ப்பாணம் கரிகணன் (தனியார்) நிறுவன உரிமையாளர் திரு.சிவ. ராஜ்குமார் அவர்கட்கும் எனது பெருநன்றிகள் உரித்தாகட்டும்.

**முருகேசு கௌரிகாந்தன்**
**பதிப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசங்கிலியன்

போர்ப்பறை முழங்க, களிறுகள் பிளிற புரவிகள் கனைக்க வேலும் வாளும் மோதியங்கே தீப்பொறி பறக்க களம் பல கண்டு வெற்றிக் கொடி நாட்டிய தமிழ் உ லக மன்னர்களின் சரித்திர ஏட்டினில் யாழ்ப்பாண இராச்சியம் கடைசி அத்தியாயமாகும். ஆம் - முடியுடை மூவேந்தராம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிகள் வீழ்ச்சியுற்ற பின்னர்தான் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுற்றது.

அந்த வகையில் தமிழுலகின் கடைசித் தமிழ் மன்னனும், யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனும் சங்கிலியாகும். வரலாற்று ஏட்டினைப் புரட்டிப் பார்க்கின்ற பொழுது யாழ்ப்பாண இராச்சியம் பல குழப்பங்களையும், கலகங்களையும், சூழ்ச்சிகளையும் கண்டிருக்கிறது; வென்றுமிருக்கிறது. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற வன்னியரும் சிங்களவரும் ஒருவரையொருவர் தூண்டிக்கொண்டதுடன் இவ்விரு சாராரும் ஒன்றிணைந்து யாழ்ப்பாண அரசுக்கு எதிராகக் கலகங்களில் இறங்கிய நிகழ்ச்சிகளும் வரலாற்றில் ஏராளம், தாராளம். என்றபொழுதிலும் கூட, யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னர்களில் ஒருவனான செயவீரசிங்க ஆரியன் இலங்கைத் தீவு முழுவதையுமே ஆண்டிருக்கிறான்.

எங்கே பொன் கிடைக்கிறதோ அதைத் தமதாக்கிக் கொள்ள மன்னர்கள் போரில் இறங்குவார்கள். எங்கே முத்துக் கிடைக்கிறதோ அதைத் தமது சொத்தாக்கிக் கொள்ள மன்னர்கள் முட்டி மோதிக் கொள்வார்கள். இது வழக்கமே! அவ்வாறே யாழ்ப்பாண இராச்சியத்துக்குச் சொந்தமான முத்துச்சிலாபம் குறித்துக் கண்டி நாட்டரசன் புவனேகபாகு என்பவன் செயவீரசிங்க ஆரியனுடன் போர் தொடுக்க, செயவீரசிங்க ஆரியன் மின்னலெனப் பாய்ந்து இடிமுழக்கம் போல் போர் புரிந்து புவனேகபாகுவைத் தோற்கடித்ததுடன், மிதுன யாழ்கொடி தூக்கி சாலிவாகன சகாப்தம் 1380 ஆம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் 1392 ஆம் வருடம் வரைக்கும் இலங்கைத்தீவு முழுவதையும் ஆண்டான்.

அதன்பின் பராக்கிரமபாகு எனும் சிங்கள மன்னன் பாண்டிய அரசனைப் பிணை நிற்க வைத்து செயவீரசிங்க ஆரியனிடமிருந்து கண்டி இராச்சியத்தை மீளப் பெற்றுக்கொண்டான். செயவீரசிங்க ஆரியன் இறக்கும்வரை கண்டி இராச்சியம் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு திறை செலுத்தி வந்துள்ளது. கண்டி இராச்சியம் மட்டுமல்ல சிலகாலங்களில் சோழ நாடு கூட யாழ்ப்பாணத்துக்கு திறைசெலுத்தி வந்ததென்றால் யாழ்ப்பாண மன்னர்களின் பராக்கிரமம் எப்படி இருந்திருக்குமென்பது சொல்லாமலே புரியக்கூடியதாகும்.

யாழ்ப்பாண மன்னர்களின் தீரச்செயலுக்கு இன்னுமொரு சம்பவத்தை நோக்குவோம். இலங்கைத் தீவை ஒரே குடையின் கீழ் ஆண்ட செயவீரசிங்க ஆரியனுக்கு முன் அவனின் தந்தையான வீரோதய சிங்க ஆரியன் யாழ்ப்பாண இராச்சியத்தையாண்டு வந்தான். வன்னியருக்கு இவன் பெயரைக் கேட்டாலே சிம்ம சொப்பனம் போலாகும். இக்காலத்தில் மதுரையில் சந்திரசேகர பாண்டியனின் ஆட்சியை எதிரிப் படைகள் பிடித்துக்கொள்ள அங்கிருந்து ஒழிந்தோடிய பாண்டியன் யாழ்ப்பாணம் வந்திறங்கி மன்னன் வீரோதய சிங்க ஆரியனிடம் தஞ்சம் புகுந்து, தன்நிலை சொல்லி உதவியும் வேண்டி நின்றான்.

இதைக் கேள்வியுற்று சிங்க ஏறென வீறுகொண்டெழுந்த வீரோதய சிங்க ஆரியன் பாண்டியனின் கீழ் பாளையங்காரராயிருந்த சேதுபதி முதலான வீரர்களோடும், தன்சேனை வீரர்களோடும் மதுரைக்குச் சென்று சத்துரு படைகளைச் சிதறடித்துத் துரத்தி சந்திரசேகர பாண்டியனிடம் ஆட்சியை ஒப்புவித்துப் பின் யாழ்ப்பாணம் மீண்டனன். இவ்வாறாம் யாழ்ப்பாண அரசு பலமும், பராக்கிரமமும் நிறைந்து விளங்கிற்று என்றால் அதன் மன்னர்களன்றி வேறுயார்தான் காரணமாக இருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியம் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததாக அறியக்கிடக்கின்றது. ஆதியில் யாழ்ப்பாணம் வெறும் மணல் திட்டாக இருந்த காரணத்தினால் 'மணல்திடல்' என வழங்கலாயிற்று. பின்னர் அந்தகனான யாழ்பாடிக்குப் பரிசாக வழங்கப்பட்ட 'மணல்திடல்' யாழ்ப்பாணம் எனப் பெயர் மாறிற்று. கலி வீரராகவன் வயோதிபனாகும் வரை யாழ்ப்பாணத்தை ஆண்டான். அவனுக்கு வாரிசு இல்லையாகையால் அவன் இறந்த பின் யாழ்ப்பாணம் மன்னன் இன்றிக் குழம்பியும், தளம்பியும், குமுறியும் கொண்டிருந்தது.

இச் செய்தியை சோழ நாட்டிற்கு எடுத்துச் சென்ற பொன்பற்றியூர் பாண்டி மளவன் எனும் ராஜப் பிரதானி மாருதப்புரவீகவல்லியின் மகன் முறையும்? திசையுக்கிர சோழன் மகன் சிங்கேதுவின் மருமகனும் ஆகிய சிங்க ஆரியன் என்னும் இராசகுமாரனை யாழ்ப்பாணத்தை வந்தாளும்படி வேண்டிக்கொள்ள சிங்க ஆரியன் மறுக்காது புத்தி விவேகத்திற் சிறந்த புவனேகவாகு எனும் மந்திரியையும் காசியில் இருந்து வந்த வேதியர் குலத்துங்கனான கங்காதரக் குருக்களையும் அழைத்துக்கொண்டு பாண்டியரிடம் பெற்ற பெருஞ் சேனையோடு யாழ்ப்பாணம் புறப்பட்டான்.

யாழ்ப்பாணம் வந்தபோது தன்னை எதிர்ப்பார் எவருமில்லாமையால் முதலில் பளையமடித்த இடத்திலேயே நகரினைக் கட்ட எண்ணி அதற்கு நல்லூரெனப் பெயரிட்டு, அங்கேயே தன் அரசிருக்கையை அமைத்துக்கொண்டான். அவன் நல்லூரில் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கட்டுவித்து பூங்காவையும், பூங்காவில் நடுவே குளியல் மண்டபமும், முப்படைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்தில் யமுனை நதித் தீர்த்தத்தைக் கலந்து விடச் செய்து, நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனாவீரருக்கான இருப்பிடங்களையும் கட்டுவித்தான். உத்தண்ட வீரசிகாமணியாகிய வீரசிங்கன் என்பானைத் தன் சேனாபதியாகவும் ஆக்கிக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த்திசைக்கும் பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார் கோவிலையும், மேல்த்திசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும், வடதிசைக்கு சட்டநாதீஸ்வரர் கோவிலையும் கட்டுவித்தவன் சிங்க ஆரிய மன்னனே. இவனது கையொன்று கூழங்கையானதினால் கூழங்கை ஆரியன் என அழைக்கப்பட்ட இவனின் இயற்கைப் பெயரே சிங்க ஆரியன் என்பதாகும். சிங்க ஆரியன் நல்லூரில் நல்லாட்சி புரிந்து வருகையில் சாலியாகன சகாப்தம் 870 ஆம் வருடத்தில் புறமதில் வேலையையும் கந்தசுவாமி கோவிலையும் மந்திரி புவனேகவாகு கட்டி முடித்தான்.

கையிலை விநாயகரின் கோவிலின் பக்கத்திலே கைலாயநாதர் கோவிலையும், கைலாயநாயகி அம்மன் கோவிலையும் விசேடமுறக் கட்டுவித்துக் குருக்களுக்கான இருப்பிடங்களையும், உக்கிரசாலை, யாகசாலை, அக்கிரகாரமடம், தேரோடும் வீதி, அன்னசத்திரம், கோபுரம் முதலானவற்றை அமைத்து இராமநாதபுரத்தையாண்ட சேதுபதிக்கு பாசுரம் அனுப்பி, கேதாரத்திலே மன்மதன் பூஜித்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்து வைத்து, பாண்டி அரசனைக் கொண்டு பிரதிஷ்டை செய்து தன்னுடன் வந்த கங்காதரக் குருக்களைப் பூசைக்கு ஏற்படுத்தி கைலைநாதர் திருவடிகளையே தியானித்து, நல்லூர் கைலையில் நெடுங்காலம் அரசியற்றி வயோதிகனாய் இயற்கையெய்தினான் மன்னன் சிங்க ஆரியன். சிங்க ஆரியனின் பின்னர் அவனது மகன் குலசேகர ஆரியன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் ஆனான்.

அவ்வாறே வழிவழியாக குலோத்துங்க சிங்க ஆரியன், விக்கிரம சிங்க ஆரியன், வீரோதய சிங்க ஆரியன், மாத்தாண்ட சிங்க ஆரியன், குணபூஷண சிங்க ஆரியன், வீரோதய சிங்க ஆரியன், செயவீரசிங்க ஆரியன், குணவீரசிங்க ஆரியன், கனகசூரிய சிங்க ஆரியன், பரராஜசேகரம், பண்டாரம், சங்கிலி ஆகியோரே யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலியன் பாட்டனான கனகசூரிய சிங்க ஆரியன் சிங்களவர் விடயத்தில் கண்டிப்பாக இல்லாமல் காருண்யமாக நடந்து கொண்டதின் நிமித்தம் அதைப் பலவீனம் எனக் கருதிய சிங்களவர் வன்னியரின் உதவி பெற்று போருக்குக் கிளம்பினார்கள். இப்படியெல்லாம் ஏற்படக்கூடும் என்ற தீர்க்க தரிசனக் கண்ணோட்டமில்லாமல் கண்மூடி வாழ்ந்த கனகசூரிய சிங்க ஆரியன் கடைசிவேளையில் எதையும் சமாளிக்க எவ்வித ஆயத்தமும் இல்லாதவனாய் இரவு வேளை பார்த்து தன் மனைவியையும் இரு புத்திரர்களையும் அழைத்துக்கொண்டு வடநாட்டுக்கு ஓடிவிட விஜயவாகு எனும் சிங்களவன் தனக்குத் தானே அரசனென நாமம் பூண்டு யாழ்ப்பாணத்தை ஆண்டான்.

கனகசூரிய சிங்க ஆரியன் தன் இரு குமாரராகிய பரராஜசேகரனையும் செகராஜசேகரனையும் திருக்கோவிலூரில் அரச வம்சத்தாரிடம் கல்வி கற்க ஒப்புவித்து விட்டு தன் மனைவியுடன் காசிபரியந்தமுள்ள திருத்தலங்கள் அனைத்திற்கும் யாத்திரை மேற்கொண்டான்.

காலம் வேகமாக விரைந்தது. 17 வருடங்களின் பின் அரச குமாரர்கள் இருவரும் கல்வி அறிவிலும், வாட் பயிற்சி முதலான போர் வித்தைகளிலும் விளங்கியதுடன் யாழ்ப்பாண இராச்சியத்தை மீட்டுக்கொள்ள இவ் இருவரும் செய்த பிரயத்தனங்களையும் கண்டு கனகசூரிய சிங்க ஆரியன் அகம் மகிழ்ந்தான்.

தாய் திருநாடு மீண்டும் கொள்ளப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என அங்களிப்புக் கொண்ட கனகசூரிய சிங்க ஆரியன் தன் மனைவி புத்திரருடன் திருக்கோவிலூரில் இருந்து மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். இந்நாட்டைப் பகுதிபகுதியாக ஆண்ட சிற்றரசர்கள் எல்லோரும் தம் சேனையையும் படைக்கலங்களையும் கொடுத்துதவ தன் கனவு நனவாகப் போகும் நாளை நினைத்து யாழ்ப்பாணம் வந்திறங்கிய கனகசூரிய சிங்க ஆரியன் மன்னன் கோட்டைக்குள் தன் புத்திரர் சேனைகள் சகிதம் நுழைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திராத வேளையில் கோட்டைக்குள் நுழைந்த கனகசூரிய சிங்க ஆரியனையும், சேனை வீரர்களையும் கண்ட விஜயவாகு பேரதிர்ச்சியுற்றாரெனினும் சில நொடிக்குள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சடுதியாய் தன் சேனையைக் கூட்டி சமர் புரியும் தயார் நிலையில் நின்றான். இதைக் கண்ணுற்ற அரச குமாரர் பரராஜசேகரனும் செகராஜசேகரனும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் சத்துரு சேனைக்குள் ஊடுருவ இரு சேனைகளும் முட்டி மோதவும் கோட்டை பெரும் அமர்க்களப்பட்டது. விஜயபாகுவும் என்றுமில்லாத் துணிவுடன் வாளைச்சுழற்றி நிற்க அவன் முன் பாய்ந்த பரராஜசேகரன் தன் வாளுக்கு அவனை இரையாக்கினான். பின்னர் தன் தந்தையை சிம்மாசனம் ஏற்றித்தான் தேசவிசாரணை செய்து கைதிகளாக்கப்பட்ட சத்துரு சேனைகள் பலருக்கு கொலைத் தண்டனை வழங்கினான்.

யாழ்ப்பாண இராச்சியம் மீட்கப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் பரவ மக்களும் ஆனந்த ஆரவாரத்தில் அமிழ்ந்தனர்.

இளவரசன் பரராஜசேகரன் சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்த இராசலட்சுமியை மணம்புரிந்தான். அதன் பின் சில காலம் வரை அரசியற்றிய கனகசூரிய சிங்க ஆரியன் தன் தள்ளாமை காரணமாக ஓய்வுகொள்ளக் கருதி மூத்த குமரன் பரராஜசேகரத்திற்கு பட்டாபிஷேகம் சூட்டுவித்து சிலநாட்களில் இயற்கையெய்தினான்.

பரராஜசேகரனும் தம்பியும் தம் முன்னோர்களின் சிங்க ஆரியப்பட்டத்தை 'சிங்க' எனச் சுருக்கித் தங்கள் பெயர்களின் முன் சேர்த்து சிங்க பரராஜசேகரம், சிங்க செகராஜசேகரம் என எழுதி வந்தார்கள்.

மன்னன் சிங்க பரராஜசேகரனின் தம்பி சிங்க செகராஜசேகரம் கல்வியறிவிற் சிறந்தவனாகவும் வித்துவ சாமர்த்தியம் நிறைந்தவனாகவும் விளங்கினான். யாழ்ப்பாணத்தில் கல்வியறிவை வளர்க்கும் பொருட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் வித்துவான்களையும் வித்துவசிகாமணிகளையும் கூட்டிச் சங்கம் அமைத்தான்.

அவன் வடநாட்டிலும் தென்நாட்டிலும் இருந்து சமஸ்கிருத, தமிழ் சாஸ்திர நூல்களை வரவழைத்ததுடன் அவைகளை நூலாக்கிப் பரப்ப எண்ணிச் செயற்பட்டான். தான் அமைத்த சங்கத்தின் மூலம் பல நூல்களை இயற்றுவித்தான். தானும் செகராஜசேகரம் எனும் சோதிட முதலிய பல நூல்களை இயற்றினான். மேலும் மேலும் கல்வி சாஸ்திரங்களைக் கொணர அவன் அடிக்கடி சேதுவுக்கு யாத்திரை மேற்கொண்டு வந்தான்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் கல்வியறிவிற் சிறந்து துலங்கியது. மன்னசிங்க பரராஜசேகரன் மனநீதியும் பரசக்கிரமமும் வாய்ந்தவன் என்பது உண்மையேயாயினும், தனது தந்தையான கனகசூரிய சிங்க ஆரியனின் ஆட்சிக்கு சிங்களவராலும் வன்னியராலும் ஏற்பட்ட அச்சுறுத்தலும் அபகரிப்பும் தன் நாட்டுக்கு ஏற்படக்கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாய் காவலர்களையும் ஒற்றர்களையும் இரவு பால் கூடுதலாகக் கடமையிலீடுபடுத்தி எச்சரிக்கையாக எச்சமயத்திலும் எதற்கும் ஆயத்தமாக இருந்தானாயினும் அவனது குமாரர் இருவர் ஒருவனையடுத்து ஒருவனாகக் கொலை செய்யப்பட்ட போது, அக்கொலைகளைத் துப்புத்துலக்க முடியாத அளவிற்கு மன்னனின் திறமைகள் எங்குதான் முடங்கிக் கிடந்ததோ! அல்லது ஒரு கொலை இரு கொலைகளாகச் சரித்திர ஆசிரியர்களால் சங்கிலியன் மீது பழி சுமத்தப் புனையப்பட்டிருந்தால் அதற்காக மன்னன் சிங்க பரராஜசேகரனை யாரும் குற்றம் காணமுடியாதுதான்.

ஒன்றன்பின் ஒன்றாகத் தனக்கு மூன்று மனைவியரை ஆக்கிக் கொண்டான் மன்னன் சிங்க பரராஜசேகரன். பட்டத்துத் தேவியாகிய சோழவம்சத்து இராசலட்சுமிக்கு சிங்கவாகு, பண்டாரம் என்னும் இரு புதல்வர்களும் இரண்டாவது மனைவியாகிய பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த அரசகேசரியின் மகளான வள்ளியம்மைக்கு நாலு பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவர்களில் மூத்தவனின் பெயர் பரநிருபசிங்கன் என்பதாகும்.) மூன்றாம் மனைவியாகிய வைப்புப் பெண் என்றழைக்கப்படும் மங்கத்தம்மாளுக்கு சங்கிலி என்ற புதல்வனும் பிறந்தனர். மூன்று மனைவியரும் ஏழு பிள்ளைகளுமாக மன்னன் சிங்க பரராஜசேகரனின் அரச குடும்பம் பெரிதாகியிருந்தது.

சிங்கபரராஜசேகரனின் முதல் மனைவியும் இரண்டாம் மனைவியும் முறையே சோழ, பாண்டிய வம்சப்பெண்களாயிருக்கையில் வைப்புப் பெண்ணான மங்கத்தம்மாள் மணக் குடியிருப்புப் பெண்ணாவாள்! அதாவது மணக்குடியிருப்பைச் சேர்ந்த பெண்ணாகும்.

யாழ்ப்பாணத்தின் ஆதிப் பெயர் 'மணல்திடல்' என்பதாகும். இம் 'மணல்திடலி' ன் ஆதிக்குடியன் மணக்குடியிருப்பாளரென அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால், இந்த மணக்குடியிருப் பாளாகிய மங்கத்தம்மாளுக்குப் பிறந்த சங்கிலியே யாழ்ப்பாண மண்ணுக்கு உரித்தானவனெனக் கருத முடியுமல்லவா!

மன்னன் சிங்க பரராஜசேகரன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டு வருகையில் முக்காலமும் அறிந்த முனிபுங்குவராம் சுபதிட்டமுனி அவனிடம் வருகிறார். பேருவகையுடன் முனிவரை வரவேற்ற மன்னன் தான் செய்ய வேண்டிய ஆசாரவுபசாரங்களைச் செய்து ஆசனத்தில் அமர்த்தி தன்வருங்காலப் பலன் குறித்து அவரிடம் வினாவ முனிவரும் சொல்லிச் செல்கிறார்.

**மூத்த மகன் மரணம்**

ஒரு நாள் - பட்டத்துத்தேவியின் மூத்த குமாரனும் பட்டத்து இளவரசனுமாகிய சிங்கவாகு திடீரென இறந்து விடுகிறான். அவனது உடல் நலம் பாதித்திருந்ததைக் கண்டு அவன் விஷக்கடியினால் இறந்தானா அல்லது நஞ்சூட்டப்பட்டானா என்ற குழப்ப நிலை நிலவியதுடன் பட்டத்து இளவரசன் இறப்பினால் அரண்மனை பெரும் சோகத்தில் மூழ்கிற்று. பட்டத்து இளவரசன் சிங்கவாகுவின் இறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பச்சையான கொலை என்றும் இதை சங்கிலியே செய்திருப்பான் என்றும் ஒரு வதந்தி பரவிற்று அல்லது பரப்பப்பட்டது. உண்மையில் சங்கிலி இக்கொலையைச் செய்திருப்பானா? பட்டத்து இளவரசன் சிங்கவாகு இறந்ததால் ஆட்சிக்கு வாரிசாக இருப்பவன் அவன் சொந்தத்தம்பி பண்டாரமாகும். பண்டாரனும் இறந்தால் ஆட்சிக்கு வாரிசாகவிருப்பவன் மன்னன் சிங்க பரராஜசேகரத்தின் இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கமாகும்.

அரச கட்டிலேற இத்தனை வாரிசுகள் இருக்கையில் சங்கிலி இக்கொலைகளைச் செய்திருப்பானா? தமையன் இறந்தால் தனக்கு சிம்மாசனம் கிடைக்கும் என்று நினைத்துப் பண்டாரமே இக் கொலையைச் செய்ய பழி சங்கிலி மீது வீழ்ந்ததா? அல்லது மூன்று மனைவியரும் ஏழு பிள்ளைகளையும் கொண்ட அரச குடும்பத்தில் குழப்பத்தையும் சிக்கலையும் உண்டு பண்ணவும் அதன் நிமித்தம் அரச குடும்பத்திற்குள்ளேயே குத்துவெட்டுப்பாடும் பழிவாங்கலும் ஏற்பட்டால் ஆட்சியைத் தான் சுலபமாகக் கைப்பற்றலாமென்று மாற்றார் செய்த சூழ்ச்சியின் விளைவா இக் கொலை? அரண்மனைகளில் நஞ்சூட்டிக்கொல்வதென்பது சாதாரண நிகழ்ச்சிகளாக நடைபெற்ற காலங்களும் உண்டு. இந்த நிலையில் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு யார் எதிரிகளாக இருந்தார் என்பதை நாம் சற்று ஊடுருவி நோக்க வேண்டும். யாழ்ப்பாண அரசுக்கு எதிராகக் கலகம் விளைவிக்கும்படி யாழ்ப்பாணப் பிரசைகளை வன்னியர்கள் தூண்டிவிட்ட நிகழ்ச்சிகளை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். மன்னன் விக்கிரமசிங்க ஆரியன் காலத்தில் வன்னியர் தூண்டிய கலகத்தைத் தானே முன்நின்று அடக்கினான். மன்னன் மார்த்தாண்ட சிங்க ஆரியன் காலத்தில் வன்னியர் கலகத்தில் இறங்க அக்கலகமும் அடக்கி ஒடுக்கப்பட்டது.

மன்னன் வீரோதயசிங்க ஆரியன் வீரத்தில் பெயர் பெற்றவனாகும். அவன் காலத்திலும் வழமை போல் எழுந்த கலகத்தைத் தானே முன் நின்று முறியடித்து அடக்கி ஒடுக்கிய மன்னன் சதா கலகங்களைத் தூ ண்டி அமைதி குலைத்து வந்தவர்களுக்கும் பாடம் புகட்டக் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று பலரைத் தன் வாளிற்கு இரையாக்கி அவர்களின் ஏழு கிராமங்களைக் கொள்ளையடித்து மீண்டான். மன்னனின் இச் செயல் கண்டு பின்னர் ஏனையோரும் அஞ்சி நடக்கத் தொடங்கினர். இதன் காரணமாக அவன் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் குழப்பங்களும், கலகங்களும் குறைந்து அமைதி நிலவத் தொடங்கியது. ஆனால் ஒரு சமயம் பாண்டிய மன்னன் சந்திரசேகர பாண்டியன் சத்துருப்படைகளிடம் ஆட்சியைப் பறி கொடுத்துவிட்டு, யாழ்ப்பாணத்திற்கு ஒழித்து ஓடி வந்து, மன்னன் வீரோதயசிங்க ஆரியனிடம் தஞ்சம் புகுந்து உதவி வேண்டி நிற்க வீறு கொண்டெழுந்த மன்னன் மதுரைக்குப் படை நடத்திச் சென்றான்.

இவ்விபரங்களைத் தன் வேவுக்காரர் மூலம் அறிந்து கொண்ட வன்னியர் யாழ்ப்பாண மன்னனிற்கு சேனைகளில் சில பிரிவுகளும் மதுரைக்குப் போனதால் யாழ்ப்பாணத்தின் மீது சுகமாகப் படையெடுக்கக் கருதி கண்டி அரசனிடம் சென்று காரணம் கூறி படைத்துணை கேட்டார்கள். அவர்களின் வேண்டுதலுக்குக் கண்டி அரசன் முற்றாக மறுத்துவிட்டான். மதுரைக்குச் சென்ற யாழ்ப்பாண மன்னன் வீரோதயசிங்க ஆரியன் அங்கு சத்துருப்படைகளுடன் சமராடி படைகளைச் சிதறடித்துத் துரத்தி சந்திரசேகர பாண்டியனிடம் மீண்டும் ஆட்சியை ஒப்புவித்து யாழ்ப்பாணம் திரும்பிய போது கண்டி அரசனிடம் தாம் படைத்துணை கேட்டுப் போன விபரம் யாழ்ப்பாண மன்னனுக்குத் தெரிந்தால் மீண்டும் அவன் தம் நாடு மீது படையெடுத்துத் தம்மை மோசமாகத் தண்டிப்பானென அஞ்சிய ஏழு வன்னியர்களும் தம் திரவியங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாண அரண்மனைக்கு வந்து மன்னன் வீரோதயசிங்க ஆரியனின் முன் வைத்த பெருமையும், நட்புப் பாராட்டுவது போல் பாசாங்கு செய்து சென்றனர்; தானில்லாச் சமயம் யாழ்ப்பாண அரசைப் பிடிக்கக் கருதி கண்டி அரசனிடம் தாம் படைத்துணை கேட்டுப்போன விபரம் மன்னன் வீரோதய சிங்க ஆரியனுக்கு தெரியாதமையால் அவனும் அவர்கள் தந்த திரவியங்களைப் பெற்று நட்புப் பாராட்டி அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துருப் படைகளிடம் வீழ்ச்சியடைந்த மதுரையைப் போராடி மீட்டு பாண்டியனிடம் ஒப்புவித்துவிட்டு வந்த யாழ்ப்பாண மன்னன் வீரோதயசிங்க ஆரியனின் வீர பிரதாபங்களைப் போற்றும் முகமாகவே அவனுக்கு வெகுமதிகள் கொண்டு வந்ததாக ஓர் எண்ணத்தை அரண்மனையில் பரப்பிச் சென்றனர் வன்னியர். கண்டி அரசனிடம் படைத்துணை கேட்டுப் போன விடயம் மட்டும் மன்னன் வீரோதயசிங்க ஆரியனிற்கு அன்று தெரிந்திருந்தால் தன் சூழ்ச்சியை மறைக்க மன்னனுக்கு வெகுமதிகள் சுமந்து வந்த அவ் ஏழு வன்னியர்களின் தலைகளும் உருண்டிருக்கும். மன்னன் வீரோதய சிங்க ஆரியனிடம் அவர்கள் வந்துபோன அதே இரவு போசனம் அருந்திவிட்டு துயில் கொள்ளச் சென்ற மன்னன் விடியற்காலையில் சப்ரமஞ்சத்திலே இறந்துகிடக்கக் காணப்பட்டான். இம் மரணத்தைப் பற்றி பலவாறாகப் பேசிக் கொள்ளப்பட்டது. நச்சுப் பாம்புகளின் சதிச் செயல் மன்னனின் சயன மண்டபம் வரைக்கும் சென்றதால் ஏற்பட்ட விளைவா இது? அல்லது அதே இரவு மன்னனின் போசனத்தில் நஞ்சோ அளவுக்கு மீறிய தூக்க மருந்தோ தூவப்பட்டதா?

இது சங்கிலி பிறப்பதற்கு ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற சோக நிகழ்ச்சியாகும். இல்லாவிட்டால் இதுவும் சங்கிலி மீது சுமத்தப்பட்டிருக்குமோ என்னமோ? மன்னன் வீரோதய சிங்க ஆரியன் இளவயதிலேயே இறந்தான், மதுரை வரை சென்று தன் பராக்கிரமத்தைக் காட்டி வந்த மன்னனை படைகளால் வெல்லமுடியாதெனக் கருதி இத்தகைய முறையிலேயே வீழ்த்த நினைத்த சூழ்ச்சியின் எதிரொலியா இம்மரணம்?

இந்நிலை வராவிட்டாலும் என்றோ ஒருநாள் தாம் கண்டி அரசனிடம் படையெடுத்துச் சென்ற விடயம் மன்னன் வீரோதயசிங்க ஆரியனுக்குத் தெரியவந்து அவன் தம் உயிரைப் பறிப்பதற்கு முன் தாம் முந்திக் கொள்ள வேண்டும் என நினைத்து மன்னனிற்கு வெகுமதிகள் கொண்டுவருவது போல் அரண்மனைக்குள் நுழைந்து கைக்கூலிகளைத் தயாராக்கி மன்னன் உயிரில் கைவரிசை காண்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியான ஏவலாகவும் இச்சம்பவம் இருக்கலாம். இந் நிகழ்ச்சிகளை எல்லாம் நோக்கும் போது பட்டத்து இளவரசன் சிங்கவாகுவை சங்கிலிதான் நஞ்சூட்டிக் கொலை செய்திருப்பான் என்ற குற்றச்சாட்டு போலியானதாகத் தோன்றவில்லையா? இப்போலிக் குற்றச்சாட்டின் பின்னே உண்மை கொலைகாரன் மறைந்து கொண்டான் என்ற தன்மையும் புரியவில்லையா?

மன்னன் சிங்க பரராஜசேகரன் தன் பட்டத்துத் தேவியான இராசலட்சுமியின் மூத்த குமாரனான சிங்கவாகு இறந்தபின் பட்டத்துத் தேவியின் இரண்டாம் குமாரனான பண்டாரம் என்பவனுக்குப் பட்டம் சூட்டினான். யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனான பண்டாரம் பட்டம் சூட்டப்பட்ட பின் சிங்க பரராஜசேகரம் யாத்திரா தரிசனம் செய்யத் தன் பரிவாரங்களுடன் கும்பகோணம் புறப்பட்டு சங்கிலியையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். கும்பகோணத்தில் சோழ நாட்டு அரசனும் தன் பட்டத்துத் தேவியோடு வந்திருக்கக் கண்டு சந்தோஷம் கொண்டு அவர்களுடன் அளவளாவி அகமகிழ்ந்தார் சிங்க பரராஜசேகரம்.

**குழப்பம் செய்தவர் யார்?**

அவ்வேளையில் அங்கே சங்கிலி ஏதோ குழப்பம் செய்தான் என்றும் இதனால் சோழ நாட்டு அரசன் சங்கிலியையும் சிங்க பரராஜசேகரனையும் பரிவாரங்களையும் பிடித்துச் சிறையில் அடைத்தான் என்றும் கூறப்படுகிறது. எது நடந்தாலும் சங்கிலி மீதே சுமத்தப்படுகிறது. ஒரு கேள்வி, சிங்க பரராஜசேகரம் சோழ நாட்டு அரசனிற்கு மிகவும் பரீட்சையமானவன், நண்பனும் கூட. இருவரும் கும்பகோணத்தில் சந்தித்த போது ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்து அகமகிழ்ந்திருக்கின்றனர். அப்படித் தப்பாக சோழ நாட்டு அரசன் சங்கிலி செய்த குழப்பத்திற்காக சிங்க பரராஜசேகரனையும் பரிவாரங்களையும் சேர்த்துச் சிறையில் அடைப்பானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இது சங்கிலி செய்த குழப்பத்தால் ஏற்பட்டதா அல்லது சிங்க பரராஜசேகரனே ஏதாவது... அதுவுமல்லது சோழ நாட்டரசனே ஏதேனும் குறையாக நடந்து கொள்ள அதைச் சங்கிலி தட்டிக் கேட்கப்போக தந்தை சிங்க பரராஜசேகரனும் சங்கிலிக்குப் பரிந்து பேச சோழ நாட்டரசன் எல்லோரையும் சிறையிலடைத்தானா?

சிங்க பரராஜசேகரனும், சங்கிலியும் பரிவாரங்களும் சோழ நாட்டரசனால் சிறை வைக்கப்படிருப்பதையறிந்த சிங்க பரராஜசேகரனின் இரண்டாம் தேவியின் மூத்த புதல்வனான பரநிருபசிங்கன் சேனைகளுடன் சென்று போராடி சோழ நாட்டரசனைத் தோற் கடித்து மடக்கி அவனது சேனைகளையும் வசப்படுத்திக்கொண்டு தந்தையையும் ஏனையோரையும் சிறைமீட்டு மூன்று மாதங்கள் அங்கேயே தங்கியிருக்க, தன் இராச்சியத்தைத் தான் திறை தந்து ஆளுவதாக சோழ நாட்டரசன் கூறவே அதற்கேற்ற பிணையைப் பெற்றுக்கொண்டு இராச்சியத்தை அவனிடம் ஒப்புவித்துவிட்டு, யாழ்ப்பாணம் மீண்டான்.

யாழ்ப்பாணம் வந்தவுடன் சிங்க பரராஜசேகரன் பரநிருபசிங்கத்தை அழைத்து அவனை மகிமைப்படுத்திக் கள்ளியங்காடு, அச்சுவேலி, சண்டிலிப்பாய், அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் முதலிய ஏழு கிராமங்களையும் அவனுக்குச் சொந்தமாகச் செப்புத்தகட்டில் பட்டயம் எழுதிக் கொடுத்ததுடன் யாழ்ப்பாண அரசின் இரண்டாம் அதிபதியாகவும் ஆக்கினான் பரநிருபசிங்கன். அவனே மருத்துவத் தொழிலிலும் கீர்த்தி பெற்றிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்டி அரசன் உபசாரம்**

ஒரு சமயம் கண்டி நாட்டு அரசனின் மனைவிக்கு ஏற்பட்ட வயிற்றுவலியை அங்குள்ள மருத்துவப் பண்டிதர்களால் நீக்கமுடியாமல் போகவே கண்டி நாட்டரசன் சிங்க பரராஜசேகரனுக்கு பாசுரம் அனுப்பி, பரராஜசேகரன் பரநிருபசிங்கனுக்கு உத்தரவிட அவன் கண்டி நகருக்குச் சென்று அரசியின் வயிற்றுவலியை ஒரே ஔடதத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமாக்கியதால் கண்டி நாட்டரசன் அவனுக்கு செய்யவேண்டிய உபகாரம் அனைத்தையும் செய்தனுப்பினான்.

### வேட்டைக்குச் சென்ற வேளை

யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனான பண்டாரமும் இரண்டாம் அதிபதியாகிய பரநிருபசிங்கனும் ஆட்சிபுரிந்து வருகையில் ஒருநாள் நந்தவனத்தில் வேட்டையாடச் சென்ற மன்னன் பண்டாரம் வாளினால் வெட்டுண்டு இறந்து கிடக்கக் காணப்பட்டான். இப்படுகொலை யாழ்ப்பாண இராச்சியத்தை உலுக்கியதுடன் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. இப்படு கொலையை எவரும் நேரில் காணவில்லை. ஆனாலும் இக்கொலையையும் சங்கிலிதான் செய்திருப்பான் என்ற வதந்திதான் பரவியது. இக்கொலையை சங்கிலி செய்திருப்பானா? இது உண்மையா?

யாழ்ப்பாணஇராச்சியத்தின்எதிரிகளாகவன்னியர்வெளிப்படையாக இயங்கிய போது யாழ்ப்பாண அரண்மனைக்குள்ளேயே மன்னர் களின் எமனாக இரகசியமாய் இயங்கிய சக்தி எது? அவன் அரண்மனை ஆளா? அல்லது மாற்றாரின் கையாளா? அதுவுமல்லாது இரண்டுமா? சிங்க பரராஜசேகரனின் பட்டத் துத்தேவியின் இரண்டு குமாரர்களும் கொலைசெய்யப்பட்டார்களே! ஒன்றன்பின் ஒன்றாக் கொலைசெய்யப்பட்டார்களே! இத்திட்டமிட்ட கொலைகளுக்கு யார்தான் காரணம். பட்டத்து இளவரசனான சிங்கவாகு பட்டஞ் சூட்டும் முன்னர் கொலை செய்யப்பட்டான். அதன் பின்னர் அவன் தம்பி பண்டாரம் பட்டஞ்சூட்டப்பட்ட பின்னர் கொலைசெய்யப்பட்டிருக்கிறான். இப்படு கொலைகளைப் புரியும் பஞ்சமா பாதகர்கள் யார்?

கொலைகளும் செய்து தன்னை நல்ல பிள்ளையாகக் காண்பித்துத் தப்பியும் கொள்ளும் சூழ்ச்சியின் புறவுருவம் யார்? தமையன் சிங்கவாகு உயிருடனிருந்தால் தன்னால் சிம்மாசனமேற முடியாது என்று நினைத்து அவன் தம்பி பண்டாரமே தமையனைக் கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருப்பானோ என்ற சந்தேகம் எழுகின்ற போதிலும் பின்னர் பண்டாரமும் கொலை செய்யப்படுவதால் இச்சந்தேகம் அவிழ்கிறது.

அப்படியானால் தொடர்ச்சியான இக்கொலைகளின் சூத்திரதாரி யார்? இக்கொலைகள் அப்போதைய வன்னியர்களின் தூண்டுதலால் இன்றேல் பதவி மோகத்தின் உந்துதலால் நடைபெற்றிருக்க வேண்டும். சிம்மாசனமேறத் துடித்த ஒருவரின் பதவிப் பித்தே இக்கொலைகளுக்கு வித்தாக அமைந்திருக்க வேண்டும். பட்டத்துத்தேவியின் இரு புதல்வர்களும் இறந்தால் அடுத்து வாரிசாக இருப்பவன் சிங்க பரராஜசேகரத்தின் இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் ஆவான். இவன் மருத்துவத் தொழில் விண்ணன். அதனால்தான் மூத்த சகோதரன் சிங்கவாகுவை விஷக்கடிக்கு இரையாக்கினான் என்று சந்தேகிக்கும் வண்ணம் நாசூக்காக நஞ்சினால் கொன்றானா? பண்டாரத்தையும் நஞ்சினால் கொன்றால் தன்னை எவரும் சந்தேகிக்கக்கூடும் என்றெண்ணித் அவனைத் தன் வாளுக்கு இரையாக்கினானா?

இவனே தன் கொலைக்குற்றங்களை மறைக்க சங்கிலிதான் கொலை செய்திருப்பான் என்ற வதந்தியைப் பரப்பினானா? சிங்க பரராஜசேகரத்தின் மூத்த மனைவியின் இரு குமாரர்களும் கொலை செய்யப்பட்ட பின் அப்பழியை சிங்கபரராஜசேகரத்தின் மூன்றாம் மனைவியின் ஒரே புதல்வன் சங்கிலி மீது சுமத்திய பின் இரண்டாம் மனைவியின் மூத்தவனான தான் சுகமாக சிம்மாசனம் மேல் ஏறலாம் என நினைத்தானா பரநிருபசிங்கன்? அப்படியானால் பரநிருபசிங்கன் தான் உண்மையான கொலைகாரனா?

மன்னன் சிங்க பரராஜசேகரன் ஒன்றுக்கு மேற்பட்ட மூன்று மனைவியரைக் கொண்டிருந்ததாலே இச்சிக்கல் தோன்றியதென்றால் மிகையாகாது. மன்னனின் மனைவியரும் புத்திரரும் நற்குணமும், பண்பும், தேச பக்தியும் கொண்டிருப்பின் இத்தகைய சிக்கல் எழாமலும் இருந்திருக்கலாம் அல்லவா? ஆனாலும் சிக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிவிட்டதே; அடுத்தடுத்த பட்டத்து இளவரசர்கள் இருவரும் கொலை செய்யப்படுவதென்றால் எத்தகைய பயங்கர நிலை உருவாகியிருந்திருக்கிறதென்பதை என்றும் உணர்ந்துகொள்ள முடியும். ஒன்றன்பின் ஒன்றாகப் பட்டத்து இளவரசர் இருவரும் கொலை செய்யப்பட்டதற்கான காரணம் சிம்மாசனம் ஏறத் துடித்த ஒருவனின் படுபாதகச் செயலன்றி வேறெதுவுமாக இருக்கமுடியாதுதானே!

நல்லூர் இராஜதானியில் நடைபெற்ற இவ்விரு கொலைகளில் கொலைஞன் நீதிக்கு முன் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுவதிலிருந்து தப்பிவிட்டான். இவ்விரு நுணுக்கமாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்கிறதென்பது தானே இதன் அர்த்தம்.

**சாட்சியம் இல்லை**

சங்கிலி இக்கொலைகளைச் செய்திருப்பானென்ற வதந்தி பரவிய போதிலும் அதை நிரூபிக்கச் சாட்சியம் எதுவுமிருக்கவில்லை.

பரநிருபசிங்கன் இவ்விரு கொலைகளைச் செய்ததற்கும் சாட்சியமில்லை. அப்படிச் சாட்சியம் இல்லாததால் தான் சங்கிலி மீது வதந்தி பரவ, அல்லது பரப்பப்பட முடிந்திருக்கிறது. இவ்விரு கொலைகளுக்கும் வேறு யார் மீதும் வதந்தி பரவவில்லை.

யாழ்ப்பாண அரசுக்கு எதிராக வெறிபிடித்த ஓநாய்கள் போல் காடுகளில் உலவி வந்த பகைவர்கள் கூட இவ்விரு கொலைகளுக்கும் சந்தேகிக்கப்படவில்லை. இந்த வகையில் இவ்வதந்தியும் திட்டமிட்ட சூழ்ச்சியேயன்றி வேறென்ன?

தனது மூத்த குமாரர்களான பட்டத்து இளவரசர் இருவரும் ஒருவர் பின் ஒருவராகக் கொல்லப்பட்டது மன்னன் சிங்க பரராஜசேகரனைத் துயரசாகரத்தில் மூழ்கடித்திருக்குமல்லவா? இதேசமயம் கொலைக்குற்றவாளி மீது அவன் வெஞ்சினம் கொண்டிருப்பானல்லவா? கொலைக்குற்றவாளியைத் தண்டிக்க அவன் துடிதுடித்திருப்பானல்லவா? இவ்விரு கொலைகள் சம்பந்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி மீது வதந்தி பரவியதை மன்னன் சிங்க பரராஜசேரனும் அறிந்தேயிருந்தான்.

ராஜ விசுவாசமுள்ள பெருஞ்சேனைக்கு அதிபதியான மன்னன் சிங்க பரராஜசேகரன் மனுநீதி படைத்தவனும், எதற்கும் அஞ்சாதவனும் கூட. அவன் சங்கிலி மீது சந்தேகித்திருந்தால் பாரதூரமான இரு கொலைகளுக்கும் சங்கிலியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தண்டித்திருக்க முடியுமே. தன் மகனைத் தேர்ச்சில்லினால் நசித்துக்கொன்ற மனுநீதிச் சோழன் பரம்பரையில் வந்தவன் தானே மன்னன் சிங்க பரராஜசேகரன்! சங்கிலி மீது எப்படித்தான் வதந்திகள் பரவிய போதிலும் மன்னன் பரராஜசேகரன் அவைகளை நம்பவில்லையென்றே தோன்றுகிறது.

மன்னனின் மூத்த மகனும் பட்டத்து இளவரசனுமான சிங்கவாகு இறந்தபோது, அது கொலையெனச் சந்தேகிக்கப்பட்ட போது, இக்கொலையைச் செய்தவன் சங்கிலிதான் என்ற வதந்தியும் பரவியிருந்த போது இரண்டாவது குமாரன் பண்டாரத்துக்குப் பட்டஞ் சூட்டிய மன்னன் சிங்க பரராஜசேகரன் கும்பகோணத்திற்கு யாத்திரா தரிசனம் செய்யப் புறப்படுகையில் சங்கிலியையும் கூடவே அழைத்துச் சென்றான். அன்று சங்கிலி மீது பரப்பப்பட்ட வதந்தியை மன்னன் நம்பியிருந்தால் சங்கிலியைத் தன் கூட அழைத்துச் செல்வதற்குப் பதில் அவனை வெறுத்து ஒதுக்கியிருப்பாரல்லவா?

பட்டத்து இளவரசன் சிங்கவாகுவைக் கொலை செய்தவன் அவனின் தம்பி பண்டாரத்தையும் கொலைசெய்யத்திட்டம் தீட்டியிருந்தது பின்புதான் புலனாகிறது. சங்கிலியும் மன்னன் சிங்க பரராஜசேகரனும் கும்பகோணம் சென்றிருந்த போது யாழ்ப்பாணத்தில் பண்டாரம் கொலை செய்யப்படவில்லை. இதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? சங்கிலி யாழ்ப்பாணத்தில் இல்லாததே அச்சமயம் இக் கொலை நடைபெறாததிற்குக் காரணமாகும். இதனால் சங்கிலிதான் பண்டாரத்தைக் கொன்றான் என்ற முடிவிற்கு யாரும் வரக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் தான் பண்டாரத்தைக் கொலை செய்தவன் சங்கிலி மீது வதந்தியைப் பரப்பிவிட முடியும். அல்லாமல் சங்கிலி கும்பகோணத்தில் இருக்கும் போது பண்டாரத்தின் கொலை நடைபெற்றிருந்தால் கும்பகோணத்தில் இருக்கும் சங்கிலி யாழ்ப்பாணத்திலிருந்து பண்டாரத்தை எப்படிக் கொலை செய்திருக்க முடியும் என்ற கேள்வி அல்லவா எழுந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் சங்கிலி இல்லாத வேளையில் பண்டாரத்தின் கொலை நடைபெற்றதற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா?

கொலையும் விழவேண்டும்; அதன் பழியும் சங்கிலி மீது விழவேண்டும் என்ற இரட்டை நோக்குக் கொண்டவன், தான் யாழ்ப்பாணத்திற்கு சங்கிலி வந்து சேர்ந்த பின் அக்கொலையைச் செய்திருக்கிறான் என்பதும் இப்போது புரியவில்லையா? இளவரசன் பண்டாரம் கொடூரமாக வாளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் அக் கொலையையும் சங்கிலியே செய்திருப்பான் என்று பரவிய வதந்தியை சிங்க பரராஜசேகரன் அறிந்திருந்தும் சங்கிலியை அவன் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தவில்லையே; கொலைக் குற்றம் சுமத்தவில்லையே; தண்டிக்கவில்லையே ஏன்?

அப்படியானால் சிங்க பரராஜசேகரன் சங்கிலி மீது பரவிய வதந்தியை நம்பவில்லை என்றுதானே அர்த்தம். ஒரு நிரபராதியை அவன் தண்டிக்க விரும்பவில்லை என்பதுதானே பொருள். தன் பட்டத்துத் தேவியின் அருமந்த மூத்தகுமாரர் இருவரையும் கொலை செய்தவன். அதற்காக சங்கிலியை வலையில் வீழ்த்தப் பார்க்கிறான் என்பதுதானே மன்னனின் எண்ணம். சங்கிலி மீது ஒன்று மாறி ஒன்றாகப் பரப்பப்பட்ட வதந்தி விஷமத்தனமானது, பொய்யானது, புனையப்பட்டது என்பதுதானே அவன் முடிவு. சங்கிலி மீது மன்னன் குற்றம் சுமத்தாததற்கும் தண்டிக்காததற்கும் இவைகள்தானே காரணமாக இருக்க முடியும். இல்லாவிட்டால் வேறு என்ன? பட்டத்து இளவரசர்கள் இருவரினதும் கொலைகளுக்கு வேண்டப்பட்ட சாட்சிகள் எவரும் இல்லை என்பதால் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றனவா என்பதை அலசி ஆராயாமலிருந்திருப்பானா? அப்படி மன்னன் அலசி ஆராய்கிற பொழுது, சங்கிலி மீது குற்றம் இல்லை என்ற முடிவுக்கு அவன் வருகின்ற போது இக்கொலைக்கு வேறு யாரோ சூத்திரதாரிகளாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் மன்னனின் மனதில் தோன்றியிருக்குமல்லவா? தன் தந்தை கனகசூரிய சிங்க ஆரியனின் ஆட்சியில் நீதிவிசாரணைகளுக்குத் தலைவனாகக் கடமையாற்றிய சிங்க பரராஜசேகரன், தனது ஆட்சியின் கீழ் நடைபெற்ற இளவரசர்களின் கொலைகளுக்கு சங்கிலி காரணம் இல்லை என்றால் வேறு யார் காரணம் என்பதை அறியாமல் இருந்திருப்பானா?

இக் கொலைகளுக்கு வேறு பகைவர் காரணமாயிருந்திருப்பின் அதை அம்பலத்திற்குக் கொண்டுவந்து கொலைஞனைக் கொலைக்களம் அனுப்பியிருப்பானே மன்னன். ஆனால் இக் கொலைஞன் தன் குடும்பத்திற்குள்ளே சங்கிலி அல்லாத வேறொருவனாக இருப்பதால் இது வெளியே தெரிந்தால் அரச குடும்பத்தின் மானம் காற்றாய்ப் பறக்கும் எனக் கருதியதுடன் அரச குடும்பத்திற்குள் இது பெரும் பூகம்பத்தை உண்டுபண்ணும் என்றெண்ணி தன் மனதில் தீர்மானித்த கொலைக்குற்றவாளியை மன்னன் சுட்டிக்காட்ட விரும்பாமல் மௌனமாகவிருந்தானா?

மன்னன் பரராஜசேகரன் தன் மனதினால் தீர்மானித்த கொலைக்குற்றவாளி பரநிருபசிங்கனா? அவன்தான் மன்னனின் இரண்டாவது மனைவியின் மூத்த புதல்வன். தன் மூத்த மனைவியும் பட்டத்துத்தேவியுமான இராசலட்சுமியம்மாவின் மூத்த குமாரன் இளவரசன் சிங்கவாகு பட்டஞ் சூட்டப்படுமுன் கொலைசெய்யப்பட்ட பின்னரும் மன்னன் சிங்க பரராஜசேகரன் தொடர்ந்து சிம்மாசனத்தில் இருந்திருக்கலாம்.

ஆகக்கூடிய வயதும் அசைக்க முடியாத சேனையும் இருக்கும் போது மன்னன் சிங்க பரராஜசேகரன் அரச பீடத்தில் வீற்றிருந்திருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அதைவிடுத்து, சிங்கவாகு இறந்தபின்னர் அவன் தம்பி பண்டாரத்துக்கு அவசரஅவசரமாக மன்னன் சிங்கபரராஜசேகரன் பட்டஞ் சூட்டச் செய்தது ஏனோ? சிங்கவாகு இறந்த பின்னர் அவன் தம்பி பண்டாரத்துக்குச் சேர வேண்டிய சிம்மாசனத்தின் மீது வேறு யாரோ கண்வைத்திருந்ததை இராஜதந்திரமும் மதிநுட்பமும் உள்ள சிங்க பரராஜசேகரன் முன்னரே அறிந்திருந்தானோ?

அல்லது பட்டத்துத் தேவியின் மூத்த மகன் இறந்த பின்னர் சிம்மாசனத்தைத் தனது மூத்த மகன் பரநிருபசிங்கனுக்குத் தரும்படி மன்னனின் இரண்டாவது மனைவி வள்ளியம்மை சம்பிரதாயங்களையும் மீறி அரசனைக் கேட்டாளா? சம்பிரதாயங்களையும், மனநீதியையும் மீற விரும்பாத மன்னன் அதனால்தான் சிங்கவாகு இறந்தபின் அவன் தம்பி பண்டாரத்திற்கு அவசரமாகப் பட்டாபிஷேகம் செய்துவைத்துவிட்டு சங்கிலியையும் அழைத்துக் கொண்டு கும்பகோணத்திற்கு யாத்திரா தரிசனம் செய்யப் புறப்பட்டானா?

தனது இரண்டாவது மனைவி வள்ளியம்மையின், அவளின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனின் ஆசை அபிலாஷைகளை மன்னன் சிங்க பரராஜசேகரன் உணர்ந்தேயிருக்கிறான் ஆனாலும் அப்போதைய வாரிசு வரிசைப்படி பண்டாரத்திற்குச் சொந்தமாகவிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தை எப்படிப் பங்குபோட்டுக் கொடுப்பது என மனக்குழப்பம் மன்னனுக்கு இருந்திருப்பினும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் அல்லது இரண்டாவது மனைவியின் நிர்ப்பந்தம் அவனுக்கு இருந்திருக்கிறது.

**மன்னன் காத்திருந்தான்**

இவைகளைச் சாதாரணமாகச் செய்துவிட முடியாது. இதன் காரணமாக அதற்கான தருணத்தையும் எதிர்நோக்கிக் காத்திருக்கிறான். மன்னன் காத்திருந்த தருணமும் கும்பகோணத்தில் ஒரு நிகழ்ச்சி ஏற்படுகிறது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய மன்னன் சிங்க பரராஜசேகரன் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பியதும் பரநிருபசிங்கனையும் அவனின் வீரபிரதாபத்தையும் மகிமைப்படுத்துவது போல் ஏழு கிராமங்களை அவனுக்குச் செப்புத் தகட்டில் பட்டயம் எழுதிச் சொந்தமாகக் கொடுத்தவுடன் இராச்சிய அதிகாரத்திற்கு இரண்டாம் அதிபதியாகவும் ஆக்குகிறான்.

யாழ்ப்பாண மன்னனாகப் பண்டாரமும், இரண்டாம் அதிபதியாகப் பரநிருபசிங்கனும் இராச்சிய பரிபாலனத்தை நடத்திவருகையில் தான் ஒருநாள் நந்தவனத்தில் பண்டாரம் வாளினால் வெட்டிக் கொலை செய்யப்படுகிறான். அப்படியானால் ஆட்சிக்கு அடுத்த வாரிசு பரநிருபசிங்கனே; மன்னனின் மூத்த மனைவியின் இரு புதல்வர்களும் கொல்லப்பட்ட பின் மன்னனின் இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் தானே சிம்மாசனம் ஏற முடியும். வாரிசு வரிசையில் பார்த்தால் பரநிருபசிங்கனுக்கு மூன்றாவது இடமும் சங்கிலிக்கு ஏழாவது இடமும் கிடைக்கிறது. வாரிசு வரிசைப்படி சங்கிலி சிம்மாசனம் ஏற வேண்டுமென்றால் அவனுக்கு முன் வாரிசு ஆறு பேர் இறக்க வேண்டும்; அல்லது கொலை செய்யப்பட வேண்டும்.

வாரிசு வரிசைப்படி பரநிருபசிங்கன் சிம்மாசனம் ஏற வேண்டும் என்றால் அவனுக்கு முன் வாரிசுகள் இரண்டு பேர் இறக்க வேண்டும். அல்லது கொல்லப்பட வேண்டும். அதைப்போலவே பரநிருபசிங்கனுக்கு முன் வாரிசுகளான பட்டத்து இளவரசர் இருவரும் இறக்கவில்லை. கொல்லப்பட்டார்கள். இனி சிம்மாசனம் ஏற வேண்டியது பரநிருபசிங்கனே. அவனுக்கு வாரிசு தடையோ வேறு தடைகளோ இல்லை. அப்படியுள்ள தடைகள் எல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. அவன் பட்டாபிஷேகம் செய்யப்படுவதே பாக்கி.

### மன்னனுக்கு எழுந்த சந்தேகம்

மன்னன் சிங்க பரராஜசேகரன் தன் மூத்த குமாரன் சிங்கவாகு கொலை செய்யப்பட்ட போது அது சம்பந்தமாக சங்கிலி மீது பரவிய வதந்தியை நம்பவில்லை என்பது போல் பரநிருப சிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் அவனுக்கு சந்தேகம் இருக்கவில்லை. அதனால் தான் பின்னர் பரநிருபசிங்கனுக்கு ஏழு கிராமங்களை பட்டயம் எழுதி சொந்தமாகக் கொடுத்ததுடன் அவனை இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவும் ஆக்கியிருந்தான். ஆனால் பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னர் தான் இப்படியாகப் பரவிய போதிலும் மன்னனின் சந்தேகம் பரநிருபசிங்கனின் மீது விழுந்திருக்கிறது. ஆனால் இதனை வெளிக்காட்டிக் கொண்டால் அரச குடும்பத்திற்கு களங்கமும், தன் குடும்பத்திற்குள் பூகம்பமும் ஏற்படுமெனக் கருதிய மன்னன் துயரசாகரம் மேலிட மௌனமாக இருந்துவிட்டான். பட்டத்து இளவரசன் சிங்கவாகு கொலை செய்யப்பட்ட பின் அவசரமாகத் தன் இரண்டாம் புத்திரன் பண்டாரத்திற்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்த மன்னன் சிங்க பரராஜசேகரன் பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசாக வரவிரும்பும் தன் இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனிற்கு பட்டாபிஷேகம் செய்ய முன்வரவில்லை, நீண்ட மௌனத்தையே மன்னன் மேற்கொண்டான். 'என் மூத்த குமாரர் இருவரையும் கொலை செய்தவன் பரநிருபசிங்கன்; தான் சிம்மாசனம் ஏற வேண்டும் என்ற மோகத்தால் படுபாதகக் கொலைகளைப் புரிந்தவன் பரநிருபசிங்கன். தான்' என்பது தான் மன்னனின் நீண்ட மௌனத்தின் அர்த்தமா? பரநிருபசிங்கனிற்கு பட்டஞ் சூட்டி வைக்க மன்னன் சிங்க பரராஜசேகரன் முன்வராததிற்கும் இதுவே காரணமா?

சிங்கவாகு கொலை செய்யப்பட்ட பின்னர் பட்டஞ்சூட்டப்பட்ட பண்டாரம் நந்தவனத்தில் வேட்டையாடி வரும் போது அங்கு மறைந்து நின்றவனால் வாளினால் வெட்டுண்டு இறந்து கிடந்தான் என்றும், சங்கிலிதான் அதைச் செய்திருப்பான் என்றும் ஒரு சரித்திரக் குறிப்புக் கூறுகிறது. இந்த விஷமத்தனம் ஏன்? பட்டத்து இளவரசன் பண்டாரம் வேட்டையாடிச் செல்கையில் துணையின்றிச் சென்றிருப்பானா? அப்படி அவன் துணையின்றித் தனியே சென்றிருந்தாலும் நந்தவனத்தின் எந்தப் பகுதிக்கு எப்போது வருவான் என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் மறைந்து நின்றவனுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரத்தின் கீழ் ஆட்சியின் இரண்டாம் அதிபதியாகத் திகழ்ந்தவன் பரநிருபசிங்கனாகும். பண்டாரம் நந்தவனத்திற்குச் சென்றது அவனுக்குத் தெரியாமலிருக்க முடியாது. அத்துடன் பண்டாரத்தைக் கொன்றவன் மறைந்து நிற்க நியாயம் இல்லை. கொலைகாரன் நேரிற்கு நேர் தோன்றித்தான் பண்டாரத்தை வெட்டிச் சாய்த்த பின் மறைந்திருக்கிறார். அப்படியானால் பண்டாரம் நந்தவனத்திற்குச் செல்வதை அறிந்த யாரோ ஒருவன் அவனைப் பின் தொடர்ந்து சென்றிருக்க வேண்டும். அவனே இக் கொலையைச் செய்திருக்க வேண்டும். அக்கொலைக்கு எத்தனை நாட்கள் திட்டமிடப்பட்டதோ? யார் அறிவார்? கண் கண்ட சாட்சி இல்லாத இக் கொலைக்கு சங்கிலி மீது பரவிய வதந்தியை வைத்துக் கொண்டு சங்கிலியைக் குற்றம் சுமத்த முடியுமா? சங்கிலி மீது பரவிய கொலை வதந்திக்கான காரணத்தை அலசி ஆராய வேண்டாமா?

தந்தை சிங்க பரராஜசேகரன் தன் மகன் சங்கிலியை இக் கொலைக்கு சந்தேகிக்கவில்லை என்றால் அதுவே சங்கிலி நிரபராதி என்பதற்குப் போதுமானதொன்றா? இப்படியிருக்கையில் நந்தவனத்தில் கொலைகாரன் மறைந்திருந்ததை இந்தச் சரித்திரக் குறிப்பு எழுதியவர் எங்கு மறைந்திருந்து பார்த்தாராம். சிங்கவாகு கொலை செய்யப்பட்ட பின்னர் அவன் தம்பி பண்டாரத்திற்குப் பட்டஞ்சூட்டி வைத்த சிங்க பரராஜசேகரன் பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காததுடன் தானும் மீண்டும் சிம்மாசனம் அமரவில்லை. பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காத சிங்க பரராஜசேகரன் மீண்டும் தானே சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோல் ஏந்தியிருக்கலாமே!

பண்டாரம் கொலை செய்யப்பட்ட பின் ஆட்சிக்கு அடுத்த வாரிசாக இருக்கும் தன் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்கும்படி இரண்டாவது மனைவியான வள்ளியம்மை சிங்க பரராஜசேகனை வற்புறுத்தாமல் இருந்திருப்பாளா? நெருக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருப்பாளா? ஆனால் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காமல் தானும் மீண்டும் அரச கட்டில் ஏறாமல் சிங்க பரராஜசேகரன் ஆழ்ந்த மௌனத்திலிருந்த நோக்கம்தான் என்ன?

இது ஒரு மிக முக்கியமான விடயம். பண்டாரத்தின் கொலையால் சிம்மாசனம் காலியாகிறது. காலியான அச் சிம்மாசனத்தில் அடுத்த வாரிசான பரநிருபசிங்கன் அமர வேண்டும். அதற்குப் பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க வேண்டும். அல்லது சிங்கபரராஜசேகரனே மீண்டும் அரியாசனத்திலேறி ஆட்சி புரிய வேண்டும்.

ஆனால் இந்த இரண்டுமே நடவாமல் சிங்க பரராஜசேகரனால் இதற்கொரு தீர்க்கமான முடிவை வெளியிடாமல் நீண்ட மௌனத்தில் ஆழ்ந்திருந்ததன் அர்த்தம்தான் என்ன? சங்கிலி ஆட்சிபீடத்தில் ஏற வேண்டும் என்பது மன்னனின் விருப்பமா? அதுவே அவனது மௌனத்தின் அர்த்தமா? சிங்க பரராஜசேகரன் தன் இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்க விரும்பாவிடில் தன் மூன்றாம் மனைவியின் ஒரே புத்திரன் சங்கிலிக்குப் பட்டஞ்சூட்டி வைத்திருக்கலாமே? ஆனால் அது எப்படி முடியும்? அதுவும் நடக்கக்கூடிய காரியமா?

பண்டாரத்தின் கொலைக்குப் பின் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசாக இருந்தவன் பரநிருபசிங்கன். வாரிசு வரிசையில் சங்கிலியன் ஏழாவது இடத்திலிருந்தான். அதிலும் பரநிருபசிங்கனுக்கு சங்கிலி தம்பி முறை. இந்த நிலையில் சிங்க பரராஜசேகரன் சங்கிலிக்குப் பட்டஞ்சூட்டி வைத்திருந்தால் வாரிசு முறையை மீறி அண்ணன் இருக்கத் தம்பிக்குப் பட்டஞ்சூட்டி வைத்தான் என்ற பெயர் அவனைச் சேராதா? அத்துடன் சிங்க பரராஜசேகரன் சம்பிரதாயங்களை எல்லாம் மீறித்தன் வைப்பாட்டி பிள்ளைக்குப் பட்டஞ்சூட்டி வைத்தான் என்ற அவப்பெயரும் அவனைச் சேருமே. இக்காரணங்களினால்தான் பண்டாரத்தின் கொலைக்குப் பின் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காத சிங்க பரராஜசேகரன் வேறெந்த முடிவுகளையும் வெளிக்காட்டாமல் இருந்தான் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி எடுத்த முடிவு எதுவாய் இருக்கும்?**

சம்பிரதாயங்களை மீறியேனும் சங்கிலி அரசகட்டிலேறட்டும் என்பதுதான் சிங்க பரராஜசேகரனின் உள்ளூர விருப்பமும் வெளியில் சொல்ல முடியாத முடிவாகவும் இருக்க வேண்டும். சிங்க பரராஜசேகரனின் பின்னைய நடத்தை இதனைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது.

**சிக்கல்கள் நிறைந்த குடும்பம்**

மன்னன் சிங்க பரராஜசேகரனின் அரச குடும்பம் மூன்று மனைவியரையும் ஏழு பிள்ளைகளையும் கொண்ட குடும்பமாக இருந்ததால் சில சிக்கல்களும் முரண்பாடுகளும் தோன்றுவது இயல்பே. சாதாரண குடும்பங்களில் இரண்டு பெண்டாட்டிக்காரனின் திண்டாட்டத்தை யார்தான் அறியமாட்டார்கள். மூத்த மனைவியின் வீட்டிலொருவன் சொற்ப நேரம் சுணங்கிவிட்டானானால் உங்களுக்கு அவள்தான் வேண்டும். அப்படியிருக்க ஏன் என்னை எடுத்தீர்கள்? என்று இரண்டாவது மனைவி நடிப்பாள். மூத்த மனைவியின் பிள்ளைகளுக்குத் தானே சொத்துச் சேரும் என் பிள்ளைகளுக்கு என்ன சேரும் என இரண்டாமவள் வாய்மாழக் கண்ணீர் வடிப்பாள். மூத்த மனைவி அழகில்லாததால் அல்லது அவளில் விருப்பம் இல்லாததால் தன்னை எடுத்ததாக இரண்டாவது மனைவி நினைப்பாள். மூத்த மனைவியைவிடத் தான் அழகானவள் என்பதனால் தானே அவன் தன்னை இரண்டாம் மனைவியாக எடுத்துக் கொண்டதாகவும் நினைக்கும் அவன் மூத்த மனைவியின் மீது பொறாமையும் வஞ்சமும் கொண்டிருப்பாள். எதற்கும் தானே கூடுதல் உரிமை பாராட்டவும் செய்வாள். இல்லாவிட்டால் அவனுடன் படுக்கையறை வரை சச்சரவு செய்வாள். சாதாரண ஒருவனின் குடும்பத்திலெழும் சிக்கல் அரச குடும்பத்தில் எழாமல் போகுமா? அரச குடும்பம் என்றால் அவர்களும் மானிடர்தானே?

மன்னன் சிங்க பரராஜசேகரனைப் பொறுத்தவரை அவன் இரண்டு பெண்டாட்டிக்காரனல்ல. மூன்று பெண்டாட்டிக்காரன். எனவே பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், போட்டி பொறாமைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைச்சல் இருந்திருக்காது. ஆனால் இவையெல்லாம் அரசனின் குடும்ப விஷயமாதலால் வெளியே தெரிய நியாயமில்லை. மன்னனின் பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாள் மன்னன் இரண்டாவது மனைவியாக வள்ளியம்மையை வாரிக்கொண்ட போது ஏதேனும் அதிருப்தி தெரிவித்திருப்பாள் எனத் தோன்றவில்லை. பதுமையாகவே வாழ்ந்திருக்கிறாள். இதனாலேயே மன்னன் இரண்டாவது மனைவியுடன் மூன்றாவது மனைவியையும் எடுக்க முடிந்திருந்தது. அவ்வளவிற்கு பண்பின் உருவாய், பொறுமையின் சிகரமாய் பட்டத்துத் தேவி இராசலட்சுமியம்மாள் இருந்திருக்கிறாள்.

ஆனால் இரண்டாவது மனைவி வள்ளியம்மை எப்படி நடந்துகொண்டிருப்பாள்? பட்டத்துத்தேவியுடன் மன்னன் நெருங்கி வாழ்வதைக் கூட அவள் விரும்பியிருப்பாளோ என்னமோ? ஒருவனுக்கு ஒருத்தி இரண்டாம் பெண்டாட்டியாக வருகிறாளென்றால் அவள் முதல் மனைவியின் சுகத்தைப் பங்கு போட வருகிறாள் என்பது தானே அர்த்தம். சுகத்தில் மட்டுமா? சொத்து, பதவி, பட்டம் எல்லாவற்றிலும் பங்கு கேட்டு நெருக்கமாட்டாளா? மன்னன் மறுத்தால் அவனுக்கு அவள் தரும் படுக்கையறை சுகத்தில் கஞ்சத்தனம் காட்டமாட்டாளா? இப்படியும் நடந்திருக்கக்கூடும் ஆதலால்தான் இதற்கு மருந்தாக மன்னன் சிங்க பரராஜசேகரன் மூன்றாவதாக மங்கத்தம்மாளை தேர்ந்தெடுத்தான் போலும்.

பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாளுக்கு இருகுமாரர்கள் இருக்கும் போது தனது மூத்த குமாரன் பரநிருபசிங்கனுக்கு என்ன பதவிதான் கிட்டுமென்று இரண்டாவது மனைவியான வள்ளியம்மை மன்னனைக் கேட்காமலா விடுவாள்? நெருக்காமலா விடுவாள்? வருத்தாமலா விடுவாள்? மன்னனும் வேண்டிய நேரத்தில் வேண்டியது தருவதாகச் சொல்லாமலா இருப்பான். இதனால்தான் மன்னனும் சிங்கவாகுவின் கொலைக்குப்பின் பண்டாரத்துக்குப் பட்டஞ்சூட்டி வைத்துவிட்டு யாத்திரா தரிசனம் செய்ய சங்கிலியையும் அழைத்துக் கொண்டு கும்பகோணத்திற்குப் போனபோது காத்திராப்பிரகாரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியைக் காரணமாக வைத்து இரண்டாம் மனைவியின் மூத்த குமாரன் பரநிருபசிங்கனுக்கு ஏழு கிராமங்களைப் பட்டயம் எழுதிக் கொடுத்ததுடன், யாழ்ப்பாண இராச்சியத்திற்கு அவனை இரண்டாம் அதிபதியாக ஆக்கினான். தன் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த இராச்சியத்தில் ஏழு கிராமங்களைத் தன் ஒன்றுவிட்ட சகோதரனுக்கு சிங்க பரராஜசேகரன் சொந்தமாக எழுதிக் கொடுத்ததையிட்டு பண்டாரமும் அதிருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாள் தன்னைப்போல் தன் பிள்ளைகளையும் பண்பாகவும் அடக்கமாவும் வளர்த்திருக்கிறாள்.

மன்னனின் இரண்டாவது மனைவி வள்ளியம்மை தன் மூத்தமகன் பரநிருபசிங்கனுக்குப் பாலுடன் பட்டப்பதவி மோகத்தையும் ஊட்டியிருப்பாள். தன் மகனுக்கு ஆட்சி அதிகாரம் கிட்டாதாவென்று அவளும் மனப்பால் குடித்திருப்பாள். பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாளின் சுகத்தில் பங்கு போட வந்த அவள் மன்னன் சிங்க பரராஜசேகரன் மூன்றாவது மனைவியாக மங்கத்தம்மாளை எடுத்தபோது வள்ளியம்மையின் சீற்றம் மங்கத்தம்மாள் மீது திரும்பியிருக்கும். நான் இருக்க அவளேன் என்று மன்னன் மீது சீறியிருப்பாள் வள்ளியம்மை. தன்னைவிட மங்கத்தம்மாள் திறமா என்ற பொறாமையுணர்வும் அவள் மனதில் தோன்றிருக்கும்.

**அன்பை மட்டும் தேடி வந்தவள்**

மங்கத்தம்மாளைப் பொறுத்த வரை மன்னன் சிங்க பரராஜசேகரன் இருமனைவிக்காரன் என்று தெரிந்து கொண்டுதான் அவள் மன்னனிடம் மூன்றாவதாக வாழ வந்தாள். இந்நிலையில் மன்னனின் அன்பைத் தவிர வேறெதையும் அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள். அதிலும் அவள் அரச வம்சத்தைச் சேராத மணற்குடியிருப்புப் பெண். அதனாலேயே மன்னனின் வைப்பாட்டி என்ற பெயர் அவளுக்கு ஏற்பட்டது. மன்னர் சிங்க பரராஜசேகரனின் பட்டத்துத்தேவியும் இரண்டாம் மனைவியும் தனது அரச வம்ச அருமை பெருமைகளைத் தன் பிள்ளைகளிடம் கூறியிருப்பாள். பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாள் தன் குமாரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரிடமும் தான் சோழ இராஜ வம்சத்தைச் சேர்ந்தவள் என்று பிரசாபித்திருப்பாள்.

மன்னனின் இரண்டாம் மனைவியான வள்ளியம்மை தன் பிள்ளைகள் நால்வரிடமும் தான் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவள் என்ற முறையில் அவர்களின் உடலில் ஓடுவது பாண்டிய இராஜ இரத்தம் என்று கூறியிருப்பாள். ஆனால் மங்கத்தம்மாள் தன் ஒரே மகன் சங்கிலியனிடம் என்ன கூறியிருப்பாள்?

யாழ்ப்பாணத்தின் பூர்வீகக் குடியான மணற்குடியிருப்பாளாகிய எனக்குப் பிறந்த உனது உடலில்தான் இந்த மண்ணின் இரத்தம் ஓடுகிறது மகனே! என்றுதானே கூறியிருப்பாள். இதனால் சங்கிலியனுக்குத் தன் தாய் நாடான யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது பற்றும் பக்தியும் உண்டாவது இயல்புதானே.

மன்னன் சிங்க பரராஜசேகரனின் வைப்பாட்டி மகன் என்ற நிலை சங்கிலிக்கு இருந்தாலும் அவன் எவ்வித தாழ்வு மனப்பான்மையும் கொள்ளாது எவருக்கும் தலைவணங்காதவனாகவே திகழ்ந்திருக்கிறான். சிறு வயதிலிருந்தே எல்லா வித்தைகளையும் கற்கப் பிரியப்பட்டுக் கற்றிருக்கிறான். குதிரையோட்டம், வாட்பயிற்சி, கவண் வீசி கல் எறிதல், ஈட்டி எறிதல் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியிருக்கிறான்.

தன் மூதாதையோர் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் வன்னியரின் தூண்டுதலால் ஏற்பட்ட கலகங்களையும் குழப்பங்களையும் தன் பாட்டன் மன்னன் கனகசூரிய சிங்கயாரியன் காலத்தில் யாழ்ப்பாண அரசுக்கு சிங்களப் படையெடுப்பால் ஏற்பட்ட ஆபத்தையும் மனதிற் கொண்டு தாய் நாட்டைக் காக்கும் ஒரு வீரனாகத் தன்னை வளர்த்துக் கொண்டான் சங்கிலி. மன்னனின் வைப்பாட்டி பிள்ளை என்பதால் அவன் முடங்கிக்கிடக்கவில்லை.

எதற்கும் மிகத்துணிந்த மனோபாவம் கொண்ட சங்கிலியன் பின்னர் தன் மூத்த சகோதரர் இருவர் கொல்லப்பட்டதனால் தன் மீது பரவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதந்தியின் நிமித்தம் சொல்லொணா மனக்கவலையும் குழப்பமும் அடைந்திருப்பான். எனினும் மனம் தளராமல் இக் கொலைகளின் சூத்திரதாரிகளை இனங்காண அவன் துடிதுடித்திருக்க மாட்டானா? இக் கொலைகள் தனது தந்தைக்கும் தாய் நாட்டிற்கும் யாழ்ப்பாண அரசிற்கும் விடப்பட்ட சவால் எனக் கருதி சண்டாளர்களைச் சாட அவன் சரியான தருணத்தை எதிர்பார்த்துப் பதுங்கிய புலி போல் இருந்திருப்பானல்லவா? இரண்டாவதாகப் பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னரே சங்கிலியனுக்குப் பரநிருபசிங்கன் மீது சந்தேகம் கிளம்பியிருக்க வேண்டும்.

தன் மீது வீணான கொலை வதந்தி பரவியிருப்பதை சங்கிலி, தந்தை சிங்க பரராஜசேகரனிடம் முறையிட்டு மனம் குமுறாமல் இருப்பானா? அதற்கு சிங்க பரராஜசேகரன் சங்கிலியனைத் தேற்றியிருப்பார். பட்டத்து இளவரசர்கள் சிங்கவாகுவும், பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னர் பரநிருபசிங்கனே சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசு என்ற வகையில் அவனே இக் கொலையைச் செய்திருப்பான் என்ற முடிவுக்கே சங்கிலியும் வந்திருக்கிறான். ஆனால் அவனால் அதை நிரூபிக்கமுடியாதே. அப்படி முடியுமெனில் அவன் மீது கொலை வதந்தி பரவியிருக்க முடியுமா? சிங்க பரராஜசேகரனும் சங்கிலியும் இக்கொலைகளுக்கு பரநிருபசிங்கனை சந்தேகித்திருப்பினும் கூட, இது வெளியில் தெரியக்கூடாது எனத் தந்தை பரராஜசேகரன் சங்கிலியைக் கட்டாயப்படுத்தியிருக்கக் கூடும். மிகச் சிக்கலான பிரச்சினைக்கு சிங்க பரராஜசேகரன் இப்படியான முறையையே கையாண்டிருக்கிறார்.

அரச குடும்ப மானம் கப்பலேறக்கூடாது என்பதுடன் இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் சீற்றத்திற்கு ஆளாகக்கூடாது என்பதாலும் இன்னும் வேறு காரணங்களாலேயே இத்தகைய முடிவோ என்னவோ?

**சங்கிலியன் மனக்கசப்பு**

எது எப்படியிருந்தபோதிலும் இக்கொலைகளில் காரணமாகத் தன் ஒன்றுவிட்ட அண்ணன் பரநிருபசிங்கன் மீது சங்கிலியன் மனக்கசப்பு வைத்திருந்தான் என்பது மறுக்க முடியாத உண்மை. சிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராஜசேரகனும், சங்கிலியும் சில விஷயங்கள் குறித்து இரகசியமாகக் கலந்து பேசியிருக்க முடியுமென ஊகிக்க இடமிருக்கிறது.

பண்டாரம் கொலை செய்யப்பட்ட பிறகு சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வரவில்லை. தானும் மீண்டும் சிம்மாசனத்தில் அமர நினைக்கவில்லை. தான் மீண்டும் சிம்மாசனத்தில் அமர்ந்தால் ஆட்சிபீடமேறத்துடிக்கும் பரநிருபசிங்கன் சிலவேளை தன்னையும் கொலை செய்யலாமென சிங்க பரராஜசேகரன் நினைத்தானோ? அல்லது அதற்கு வேறொரு முடிவு காணவேண்டுமென்று மனதிற்குள் விரும்பியதாலேயே மீண்டுமவன் சிம்மாசனமேறாமல் மௌனமாக இருந்தானா?

பட்டத்துத்தேவியின் மூத்தகுமாரன் சிங்கவாகு கொலை செய்யப்பட்டபோது அக்கொலை சம்பந்தமாக சங்கிலி மீது வதந்தி பரவியிருந்தபோதிலும் அதை நம்பாத சிங்க பரராஜசேகரனுக்கு பரநிருபசிங்கன்மீது சந்தேகம் இருக்கவில்லை.

வழக்கமான எதிரிகளின் சதிவேலையின் நிமித்தமே சிங்கவாகு கொலை செய்யப்பட்டிருக்கிறானென்று தான் மன்னன் சிங்க பரராஜசேகரன் நினைத்திருக்கிறான்.

வேறெப்படி அவனால் சிந்திக்க முடியும்?

தன் பிள்ளைகளில் ஒன்றை மற்றப் பிள்ளை கொல்லுமென்பதை அவனால்கற்பனையிலும்நினைத்துப்பார்க்கமுடியாதே. அதனாலேயே சிங்கவாகுவின் கொலை சம்பந்தமாகத் தன் இரண்டாவது மனைவி வள்ளியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் மீதோ, தன் மூன்றாம் மனைவி வைப்பாட்டி மங்கத்தம்மாளின் ஒரே புதல்வன் சங்கிலி மீதோ அவனுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

ஆனால் சிங்கவாகுவின் தம்பி பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னர்தான் அடுத்தடுத்து இளவரசர் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டதற்கான காரணத்தையும் அக்காலைகளின் சூத்திரதாரியாரென்பதையும் ஊகித்து பரநிருபசிங்கன் மீது சந்தேகம் கொள்கிறான் சிங்கபரராஜசிங்கன்.

சிங்கவாகு கொலைசெய்யப்பட்டவுடன் அரண்மனையின் பாதுகாப்பு, இளவரன் பண்டாரத்தின் பாதுகாப்பு எல்லாமே பலப்படுத்தப்பட்டிருக்குமென்பது சொல்லாமலே புரியக்கூடியதாகும்.

அப்படியிருக்கவும், அதையும் மீறி பண்டா ரம் கொலை செய்யப்படுகிறானென்றால் உடனிருந்து கொல்லும் அவனது உடன் பிறந்து கொல்லும் பிறவி அரண்மனைக்குள் நடமாடுகிறதென்பதை சிங்கபரராஜசேகரன் ஊகித்து உணர்ந்து கொள்கிறான்.

சிங்கவாகு கொலை செய்யப்பட்ட பின்னர் பண்டாரத்துக்கு பட்டஞ்சூட்டிய சிங்க பரராஜசேகரன் யாத்திரா தரிசனம் செய்ய சங்கிலியையும் தன்னுடன் கும்பகோணத்திற்கு அழைத்துச் சென்றது சங்கிலி மீது அவனுக்கும் சந்தேகமில்லை என்பதை வெளிக்காட்டுகிறது.

பண்டாரம் கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்துக்கடுத்த வாரிசாகவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவுமிருந்த பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமல் மௌனமாகியிருந்தது பரநிருபசிங்கன் மீது அவனுக்குச் சந்தேக மிருப்பதை வெளிக் காட்டுகிறது.

**அரசன் வழங்கிய தண்டனை**

சிம்மாசனம் ஏறவேண்டுமென்ற பேராசையில் இளவரசர் இருவரினதும் கொலைகளை பரநிருபசிங்கனே செய்திருந்தால், அவன் எதற்காக அக்கொலைகளைச் செய்தானோ அவ்வெண்ணத்தைத் தன் நீண்ட மௌனத்தின் மூலம் நிறைவேறாமல் செய்துவிட்டான் சிங்கபரராஜசேகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டத்து இளவரசர்கள் இருவரும் கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனுக்கு பட்டஞ் சூட்டி வைக்காததே சிங்க பரராஜசேகரன் அவனுக்குத்தந்த தண்டனையாகும்.

இதைவிட வேறெந்தத் தண்டனையையும் பரநிருபசிங்கனுக்குத் தரமுடியாத சூழ்நிலையிலேயே சிங்க பரராஜசேகரன் இருந்தான்.

சிங்கபரராஜசேகரனுக்கு பரநிருபசிங்கன் மீது தான் கொண்டிருந்த சந்தேகத்தை வெளியில் சொல்லமுடியாத நிர்ப்பந்தமும் இருந்திருக்கிறது.

தன்னிரு புதல்வர்களான சிங்கவாகுவும் பண்டாரமும் கொலை செய்யப்பட்டதற்கு மன்னன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை எடுத்து பிள்ளைகளும் பெற்றதுதான் காரணமென்று பட்டத்துத்தேவி இராசலட்சுமி யம்மாள் மன்னனிடம் சொல்லாமல் சொல்லி யும் புலம்பியும் இருந்திருப்பாள். சோகத்தின் மறு உருவாய் அவள் மாறியிருப்பாள். இதனால் மன்னனுக்கு பட்டத்துத்தேவியின் இருப்பிடம் சதா சாவீடாகவே இருந்திருக்கும். தன் மூத்த புதல்வர் இருவரும் கொல்லப்பட்டமையால் மன்னனும் துயரவெள்ளத்தில் மூழ்கி நிம்மதியின்றித் தவித்திருப்பான். ஊண் உறக்கமின்றி உழன்றிருப்பான்.

தன் மூத்த புதல்வர்கள் இருவரை படுகொலைக்குப் பறிகொடுத்த ஒரு தந்தையின் மனநிலை எப்படி இருந்திருக்கும்?

இந்த நிலையில் அவன் தன் இரண்டாம் மனைவி வள்ளியம்மையிடம் போய் "இரு கொலைகளுக்கும் உன் மூத்த மகன் பரநிருபசிங்கனையே சந்தேகிக்கின்றேன்" என்று சொல்வானானால் என்ன நடக்கும்?

வள்ளியம்மை மன்னனை எதிர்த்து சண்டமாருதமெனக் கிளம்பியிருப்பாள். சிக்கலுக்குள் சிக்கல் தோன்றும். பரநிருபசிங்கனின் இளைய சகோதரர்கள் மூவரும் கூட "அப்பா அண்ணனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகாரன் என்கிறாரே" என்றுகூறி துக்கிப்பர். தந்தைமீது வேண்டாத வெறுப்பையும் சொல்வர். வள்ளியம்மையும் இளைய பிள்ளைகள் மூவரின் மனதிலும் தந்தைக்கெதிராக நஞ்சைத் தூவுவாள். தந்தையை விரோதிக்கவும் சொல்லுவாள். அதனால் அரச குடும்பம் அல்லோல கல்லோலப்படும். வெளியே பகைவர் நகைப்பர். இவைகளையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாதவனாகவே மன்னன் இருந்தான். அப்பப்பா அவனுக்குத்தான் எத்தனை துன்பங்கள்?

தனது தந்தை கனகசூரியசிங்க ஆரியன் காலத்தில் சிங்களப் படையெடுப்பால் 17 வருடங்கள் யாழ்ப்பாண அரசு பறிபோயி ருந்ததையும், அதனால் தன்னாட்டிலில்லாமல் தான் தென்னாட்டில் வாழ்ந்ததையும் பின்பு யாழ்ப்பாண அரசை மீண்டும் கைப்பற்றிய பின்னர் தன் ஆட்சியில் அரச குடும்பத்தில் இரண்டு படுகொலைகள் வீழ்ந்ததையும் அதுவும் தன் மூத்த குமாரர் இருவர் கொல்லப்பட்டு கொலைகாரனும் இனங்காண முடியாமல் தப்பியதால் தன் நிர்வாகத்திற்கு இழுக்கு ஏற்பட்டதையும், மூன்று மனைவியரைத் தான் எடுத்ததால் எழுந்த குடும்பச் சிக்கல்களையும் போட்டி பொறாமைகளையும், போட்டி பொறாமைகளால் நடைபெற்ற இரு கொலைகளையும் இருகொலைகளுக்குக் காரணமானவன் தன் குடும்பத்திற்குள்ளேயே இருந்ததையும் எண்ணி எண்ணி சிங்க பரராஜசேகரனின் மனம் வேதனையில் வெதும்பித் துடித்திருக்குமல்லவா? அதுமட்டுமா மூத்த மனைவியின் இரு பிள்ளைகளையும் படுகொலைக்குப் பறி கொடுத்தவன் அவன். இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் மீது கொலை சம்பந்தமாகத் தனக்குண்டான சந்தேகத்தை வள்ளியம்மையிடம் தெரிவித்தால் அவள் மற்றைய இளைய பிள்ளைகள் மூவரிடமும் தந்தை மீது விரோத மனப்பான்மையை மூட்டி அவனிடமிருந்து அவர்களைப் பிரித்து வைத்து விடுவாளோ? இதனால் அம் மூன்று பிள்ளைகளையும் சிங்க பரராஜசேகரன் உயிருடன் பிரிந்து வாழ நேரிடுமே.

**மன்னனின் மதிநுட்பம்**

ஒரு பிள்ளை செய்த குற்றத்திற்கு மற்றப் பிள்ளைகளை எந்தத் தந்தையும் பிரிந்து வாழ விரும்புவானா? மற்றப் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடமிருந்து தாயினால் பிரித்து வைக்கவே எந்தத் தந்தையும் தாங்கிக் கொள்வானா?

இதனால் கடந்த கால நிகழ்ச்சிகளையும் தன் குடும்பத்தினரின் மனோபாவங்களையும் எண்ணிப் பார்த்த மன்னன் சிங்க பரராஜ சேகரன் பரநிருபசிங்கன் மீது தான் கொண்டிருந்த சந்தேகத்தை வள்ளியம்மையிடம் வெளிக்காட்டாமல் இருந்ததுடன் இதற்கெல்லாம் ஒரு மருந்து, நீண்ட மௌனமே என்று முடிவெடுத்துக் கொண்டான். இதுவே மன்னனின் மதிநுட்ப முடிவாகும். மதி நுட்பமான தன் மௌனத்தின் மூலம் இதைச் சாதிக்க முடியுமென்றே சிங்க பரராஜசேகரன் கருதியிருக்கிறான்.

நல்லூர் அரண்மனையில் அரச குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் மனக்கசப்புக் கொண்டிருந்ததுடன் அதை வெளிக்காட்டாமலே வாழ்ந்திருக்கின்றனர். மன்னன் சிங்க பரராஜசேகரனின் பட்டத்துத் தேவியான சோழ இராஜ வம்சத்தைச் சேர்ந்த இராசலட்சுமியம்மாளும், இரண்டாம் தேவியான பாண்டிய இராஜ வம்சத்தைச் சேர்ந்த வள்ளியம்மையும் அரண்மனையில் வாழ்ந்திருக்க, எந்த இராஜ வம்சத்தையும் சேராத தன் வைப்பாட்டி மங்கத்தம்மாளை மன்னன் தன் அரண்மனையில் வைத்திருப்பானா என்பது கேள்விக்குரியதே. சிலவேளை அரண்மனைக்குப் புறம்போக்கான இடத்தில் ஒரு மாளிகை கட்டி அதில் மங்கத்தம்மாளையும் மகன் சங்கிலியனையும் மன்னன் வாழவைத்திருக்கக்கூடும். அரண்மனைக்குள் எந்தப்பகுதிக்கும் சங்கிலி சென்றுவர உரிமையுடையவனாகவே இருந்திருப்பானானாலும் அரண்மனைக்குள் நடக்கும் சில விஷயங்கள் சங்கிலிக்கு உடனுக்குடன் தெரியமுடியாத நிலையும் இருந்திருக்கும்.

இளவரசன் பண்டாரம் நந்தவனத்திற்கு வேட்டையாடச் செல்லப் புறப்பட்டது, அரண்மனையிலிருந்த இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியான பரநிருபசிங்கனுக்குத்தான் முதலில் தெரிந்திருக்கும். இவற்றையெல்லாம் சிங்க பரராஜசேகரன் அலசி ஆராயாமல் இருந்திருப்பானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியத்தின் அதிபதியாக இளவரசன் பண்டாரமும் இரண்டாம் அதிபதியாகப் பரநிருபசிங்கனும் இராச்சிய பரிபாலனத்தை நடத்தியபோது சங்கிலியன் வெறுமனே எப்பதவியும் வகிக்காமல் தனித்திருந்தான். சங்கிலியனை மன்னனின் வைப்பாட்டி மகன் என்றுதான் பலரும் நோக்கியிருப்பர். இதனை மனரீதியாக அறிந்து கொண்ட சங்கிலியன் தன்னை யாருக்கும் தலைவணங்காதவனாகவே வளர்த்துக் கொண்டான். சங்கிலியனின் வீரத்தனம், மூர்க்கத்தனம், முரட்டுத்தனம் என்றுதான் சில சரித்திர ஏடுகள் குறிப்பிட்டுள்ளன. இந்த விஷமனத்தனமாக சரித்திரக் குறிப்புக்கள் பின்னர் அம்பலப்படுத்தப்படும். எது எப்படியிருந்த போதிலும் மன்னன் சிங்க பரராஜசேகரன் தன் வைப்பாட்டி மகன் சங்கிலியன் மீது உயிரையே வைத்திருக்கிறான் என்றால் மிகையாகாது. அந்தளவிற்கு சங்கிலியனிடம் நல்ல குணாதிசயங்கள் இருந்திருக்கின்றன.

சங்கிலியன் மேல் தான் கொண்ட பற்றையும் பாசத்தையும் மன்னன் வெளிக்காட்டாமலேயிருந்திருப்பான். ஏனெனில் வைப்பாட்டி மோகத்தில் அவனின் பிள்ளை சங்கிலியனில் அதிக பாசம் வைத்திருக்கிறான் என்று இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் குற்றச்சாட்டுக்கும் சிங்க பரராஜசேகரன் இலக்காக வேண்டியிருக்குமே. மன்னனுக்குத்தான் எத்தனை சோதனை! இளவரசன் பண்டாரம் வாளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவும் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசாகவிருந்த பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காமல் சிங்க பரராஜசேகரன் மௌனமாகவிருந்தமை இரண்டாம் மனைவி வள்ளியம்மைக்கும் அவனது மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்கும் புரியாத புதிராகவேயிருந்திருக்கும். அதைத்தான் சிங்க பரராஜசேகரனும் விரும்பினான். அவர்களுக்குத் தன் மன எண்ணம் தெரியக்கூடாதென்றே விரும்பினான்.

**அரசன் ஆடிய நாடகம்**

ஆனாலும் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காமலும் தானும் மீண்டும் சிம்மாசனத்தில் அமராமல் இருப்பது சங்கிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்மாசனமேற வழிவிடுவதற்காகவே என இரண்டாம் மனைவி வள்ளியம்மையும் அவள் மகன் பரநிருபசிங்கனும் மற்றவர்களும் நினைக்கக்கூடும் எனக் கருதிய சிங்க பரராஜசேகரன் அதற்காகவும் ஒரு நாடகம் ஆடுகிறான்.

அதாவது தன் மூத்த குமாரர் இருவரினதும் படுகொலைகளினால் விரக்தியுற்ற நிலையில் நடப்பது நடக்கட்டும் என்றுதான் ஒதுங்கிக் கொள்வது போல் நடிக்கிறான் சிங்க பரராஜசேகரன். (இவைகளை எல்லாம் அலசி ஆராயாத அல்லது அலசி ஆராய விரும்பாத சரித்திர ஆசிரியர்கள் சிலர் "சிங்க பரராஜசேகரன் சங்கிலிக்குப் பயந்தே ஒதுங்கினான்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இச் சரித்திர ஆசிரியர்கள் எதையும் தலைகீழாகப் பார்ப்பதாலேயே சில சரித்திரங்களும் தலைகீழாகவே படைக்கப்பட்டிருக்கின்றன) சிங்க பரராஜசேகரன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராததும் மௌனமாகவிருந்ததும் ஒதுங்கிக் கொள்வது போல் நடித்ததும் சங்கிலியன் அரியாசனம் ஏறட்டும் என்ற ஒரே நோக்கத்தினாலேயே அன்றி வேறல்ல.

இளவரசர்கள் சிங்கவாகு, பண்டாரம் இருவரினதும் கொலைகளுக்குப் பின் சிம்மாசனத்திற்கு வாரிசாகவிருந்த தனக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமலும் மௌனமாகவும் ஒதுங்கியேயும் இருந்தது பரநிருபசிங்கனுக்கு மனக்குழப்பத்தையே தந்திருக்கும். தன் மூத்தமகன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைப்பதில் தாமதம் ஏன் என அங்கலாய்த்திருப்பாள். சிங்க பரராஜசேகரனின் இரண்டாம் மனைவியான வள்ளியம்மை தன் ஆசை நிராசையாகிவிடுமோ என்றெண்ணிய பரநிருபசிங்கன் வேறேதும் சதிகளிலும் ஈடுபடக்கூடிய மனப்பான்மை உடையவனாகையால் சங்கிலியன் உசாராகிறான். தன் தந்தை சிங்க பரராஜசேகரனின் மௌனத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அதைச் செயலாற்றத் திடசங்கற்பத்துடன் நடவடிக்கையில் இறங்குகிறான் சங்கிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரம் வாளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் அவனையடுத்து சிம்மாசனத்துக்கு வாரிசாகவிருந்த பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டிவைக்க முன்வராமல் மௌனமாகவிருந்ததுடன் தானும் மீண்டும் அரியாசனத்தில் அமராமல் ஒதுங்கியிருந்தான்.

சங்கிலியன் சிம்மாசனமேறுவதற்கு வழிவிடுவதற்காகவே மன்னன் சிங்க பரராஜசேகரன் அவ்வாறு நடந்துகொண்டான். இது அவனது பரம இரகசியமான இராஜதந்திரச் செயலாகும். இதை சங்கிலியனும் அறிந்திருந்தானாகையால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆட்சிபீடம் ஏறிக்கொண்டான். மன்னன் சிங்க பரராஜசேகரனின் வைப்பாட்டி மங்கத்தம்மாளின் மகன் சங்கிலியன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான். இது ஒரு புதுமையான நிகழ்ச்சிதான். சிங்கவாகுவும் பண்டாரமும் கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்தின் மூன்றாவது வாரிசான பரநிருபசிங்கன் உயிருடன் இருக்க, ஏழாவது வாரிசான சங்கிலியன் சிம்மாசனம் ஏறிக்கொண்டான். இராஜவம்சத்தைச் சேர்ந்த இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் உயிருடன் இருக்க சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த வைப்பாட்டி மங்கத்தம்மாளின் மகன் சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறிக்கொண்டான்.

அண்ணன் பரநிருபசிங்கன் உயிருடன் இருக்கத் தம்பி சங்கிலியன் அரியாசனம் அமர்ந்துகொண்டான். யாராலும் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்படாமலேயே சங்கிலியன் தன்னை யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக்கிக் கொண்டான். சகலவிதமான சட்டங்கள், சம்பிரதாயங்கள் அனைத்தையும் மீறி சிம்மாசனம் ஏறினான் சங்கிலியன். இதைவிட அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை. இப்படி நடக்க வேண்டும் என்றுதானே சிங்க பரராஜசேகரனும் மனதிற்குள் விரும்பியிருந்தான். இப்புதுவகையான நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண இராச்சியத்திலன்றி அகிலத்தின் வேறெந்த இராச்சியத்தின் சரித்திரத்திலும் இடம்பெற்றதில்லை. அவ்வளவிற்கும் சிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராஜசேகரனின் குடும்பப் பிரச்சினைகள் சிக்கல் நிறைந்ததாக இருந்தது. சிங்கவாகுவையும் பண்டாரத்தையும் சங்கிலியனே கொலை செய்தான் என்றும், அவன் தன்னையும் கொலை செய்யக்கூடுமென்றும் நினைத்துக் கொண்டு மன்னன் சிங்க பரராஜசேகரன் ஒதுங்கிக் கொண்டான் என்றும் சில சரித்திரக் குறிப்புக்கள் கூறுகின்றன.

சங்கிலியன் மீது இல்லாத பொல்லாத களங்கம் கற்பித்துத் தம்மை நல்லவர்களெனப் படம் பிடித்துக் காட்டுவதற்காக போர்த்துக்கேய பறங்கியரும் அவர்தம் அடிவருடிகளும் எழுதிய குறிப்புக்களைப் பிரதி பண்ணியிருக்கிறார்கள் சரித்திர ஆசிரியர்கள் என்ற எழுத்தாளர்கள். கைக்கூலி பெறவும் பட்டம் பதவி பெறவும் எழுதப்படும் கற்பனைகளும், திரிப்புக்களும் சரித்திரமாகா!

இக்கைகூலி எழுத்தாளர்களின் கூற்றுப்படி சங்கிலியனுக்குப் பயந்தே அவனின் தந்தையும் மன்னனுமான சிங்க பரராஜசேகரன் ஒதுங்கினான் என்றால் பண்டாரத்தின் படுகொலைக்குப் பின் சிம்மாசனத்திற்கு வாரிசாக இருந்தவன் இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மகனான பரநிருபசிங்கனுக்கு மன்னன் பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராத காரணத்தை கைக்கூலி எழுத்தாளர்கள் அலசி ஆராய முற்படவில்லை. அது அவர்களின் வேலையும் இல்லை. நாடு பிடிக்க வந்த போர்த்துக்கேயப் பறங்கியரின் குறிப்புகளைப் பிரதி பண்ணுவதே அவர்களின் வேலை. எனவே இப்பொய்க் குறிப்புகளை நாம் சரித்திரம் எனக் கொள்ள முடியுமா? மண்ணுக்குக் கீழே என்ன கிடக்கிறது என்று ஆராய்ச்சி நடாத்தப்படும் இந்த யுகத்தில் மண்ணுக்கு மேலே நடந்ததை நாம் ஆழமாக ஆராய வேண்டாமா? வியாபாரம் செய்யவென்று வந்து பின்னர் நாடுபிடித்த வெள்ளைப் பறங்கியரை எதிர்த்துக் கெம்பினான் பாஞ்சாலக்குறிச்சி தந்த சிங்கம் கட்டப்பொம்மன். பின்னர் அவன் எட்டப்பனால் காட்டிக்கொடுக்கப்பட்டு கயத்தாற்றின் புளியமரத்திலே வெள்ளைப்பறங்கியரால் தூக்கிலிடப்பட்டான். அந்த சுதந்திர வீரன் கட்டப்பொம்மனின் நாமம் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கக்கூடாதென்பதற்காக அவன் மீது களங்கம் கற்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொள்ளைக்காரன் கெட்டிபொம்மு" என்று குறிப்பெழுதி வைத்திருந் தார்கள் வெள்ளைப் பறங்கியர். வெள்ளைப்பறங்கியரின் அப்பெயர்க் குறிப்புக்களை நாம் உண்மைச் சரித்திரம் எனக் கொள்ளலாமா?

தாம் நாடு பிடித்த குற்றத்தை மறைக்கவும் கட்டப்பொம்மனைத் தூக்கிலிட்டுக் கொலை செய்த குற்றத்தை மறைக்கவும் கட்டப் பொம்மனை கொள்ளைக்காரன் என்று கூறி அக் கொள்ளைக் காரனிடமிருந்து மக்களைக் காக்கவே அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றதாகக் கூறித் தம்மை நல்லவர்களாகக் காண்பித்து கயிறு திரித்தார்கள் வெள்ளைப் பறங்கியர்கள். இக் கயிறு திரிப்பெல்லாம் சரித்திரமா?

ஒரு நாட்டைப் பிடிப்பதும், ஒரு இனத்தின் மண்ணைப் பறிப்பதும் மன்னிக்க முடியாத பாரதூரமான குற்றங்களாகும். இப் பெரும் அநீதியை எதிர்த்துக் கிளம்பியவர்கள் எல்லோரும் கொள்ளைக்காரர்! கொள்ளைக்காரன் என்று போலிக் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட நிகழ்ச்சிகள்தான் வரலாறுகளில் ஏராளம்.

சங்கிலியன் விஷயத்திலும் இதுவே நடந்தது. சங்கிலியனைக் கொலை செய்து போர்த்துக்கேயப் பறங்கியர் எழுதிய பொய்க் குறிப்புக்களை உண்மைச் சரித்திரமெனத் தமிழினம் நம்பி ஏமாந்தது. சங்கிலியனைக் கொன்ற போர்த்துக்கேய பறங்கியர் சரித்திரம் எழுதினால் சங்கிலியனைப் பற்றி நன்றாக எழுதுவார்களா? உண்மையை எழுதுவார்களா? இச் சாதாரண விடயம் கூட தமிழினத்திற்குப் புலப்படாமல் போய்விட்டதா? இதன் காரணமாக போர்த்துக்கேய பறங்கியர் எழுதிய பொய்ச் சரித்திரத்திற்கு மரண தண்டனை தந்து அதை ஆழக் குழியினுள் புதைப்பதே இந் நீண்ட கட்டுரைகளின் நோக்கம்.

400 ஆண்டுகளுக்கு மேலாக மூடியிருக்கும் பொய்த் திரையைப் பிய்த்தெறிந்து உண்மையைச் சுட்டிக்காட்டி கபடதாரிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தமிழனுக்கு அம்பலப்படுத்துவது இக்கட்டுரையின் புனிதநோக்கு. சங்கிலியன் மீது சுமத்தப்படாத குற்றங்கள் இல்லை. போர்த்துக்கேய பறங்கியரை எதிர்த்து சுதந்திரத்திற்காகப் போராடிய அந்த சுத்த வீரனின் நாமம் மக்கள் மத்தியில் நினைவிலிருக்கக்கூடாது என்பதற்காகவே பறங்கியரும் அவர்களின் அடிவருடிகளும் சரித்திரத்தில் கரி பூசி எழுதி வைத்தார்கள். சங்கிலியன் மீது களங்கம் கற்பித்து எழுதிவைத்தார்கள்.

**பொய்யே சரித்திரபாடம்**

இதனால் 400 ஆண்டுகளுக்கு மேலாகப் பொய்யே சரித்திரமாக இருந்திருக்கிறது. தமிழினமும் பொய்யையே நம்பி வந்திருக்கிறது. சரித்திரபாடமாகப் பொய்யே போதிக்கப்பட்டிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பொய்யே பாடமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல 400 ஆண்டுகளுக்கு மேலாக இதுபற்றி யாருமே எவருமே சிந்திக்கவில்லை. சிந்திக்கத் துணிவும் இல்லை. சரித்திரமென்றால் ஏதோ வானத்திலிருந்து விழுந்த புனித பொருள் என்ற நிர்மூட எண்ணத்தின் விளைவே இது. இதனால் 400 ஆண்டுகளுக்கு மேலாக உண்மை மறைக்கப்பட்டது.

தம் சரித்திரத்தை அறியமுடியாத பரம்பரை, தம் பாரம்பரியத்தை அறியமுடியாததன்றோ? மன்னன் சிங்க பரராஜசேகரின் பாரிய குடும்பத்தையும் அதன் பிரச்சினைகளையும் எந்த சரித்திர நூலும் விளக்கவில்லை. இங்கு இவரின் தொடரில் ஊகத்தின் நிமித்தம் அது விளக்கப்பட்டது. சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறியதற்கு அவனின் தந்தை சிங்க பரராஜசேகரனும் உடந்தையாகவே இருந்திருக்கிறான். இது ஒரு இரகசிய ஏற்பாடாகவே இருந்திருக்கிறது. இதை வைத்துக் கொண்டு சங்கிலியனுக்குப் பயந்து சிங்க பரராஜசேகரன் ஒதுங்கிக் கொண்டான் என்பது ஒரு மிகைப்படுத்தப்பட்ட பொய்யே.

பண்டாரத்தின் படுகொலைக்குப் பின் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசாகவிருந்த தன் இரண்டாம் மனைவியின் மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராத சிங்க பரராஜசேகரன் தன் வைப்பாட்டி மகன் சங்கிலியன் சட்ட சம்பிரதாயங்களை எல்லாம் மீறி ஆட்சிபீடம் ஏறியபோது அதை ஆட்சேபிக்கவுமில்லை; எதிர்க்கவுமில்லை.

யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருஞ்சேனை என்றென்றும் மாமன்னன் சிங்க பரராஜசேகரனுக்கு விசுவாசமாகவே இருந்து வந்துள்ளது. அப்பெருஞ்சேனையின் துணையுடன் சங்கிலியன் ஆட்சிபீடம்ஏறுவதைசிங்கபரராஜசேகரன்தடுத்துநிறுத்தியிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறுவதற்கு சிங்க பரராஜசேகரன் இரகசிய உடந்தையாக இருந்திருக்கும் போது அப்படிச் செய்வானா?

பண்டாரம் கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசான தனக்கு சிங்க பரராஜசேகரன் பட்டஞ்சூட்டி வைப்பார் என பரநிருபசிங்கன் முழு நம்பிக்கை வைத்திருந்தான். யாழ்ப்பாண இராச்சியத்திற்குத் தான் மன்னனாகப்போவதை நொடிக் கணக்கில் எண்ணி மனக்கோட்டை கட்டியிருந்தான் பரநிருபசிங்கன். அவனின் மனக்கோட்டை தவிடு பொடியாகுமென அவன் நினைக்கவில்லை. சிங்க பரராஜசேகரனின் இரண்டாம் மனைவி வள்ளியம்மையும் தன் மூத்த மகன் பரநிருபசிங்கன் விரைவில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாவான் என மனப்பால் குடித்தாள்.

ஆனால் தம் மூத்த குமாரர் சிங்கவாகு, பண்டாரம் ஆகிய இருவரினதும் கொலைகளுக்கு சிங்க பரராஜசேகரன் இறுதியாகப் பரநிருபசிங்கனை சந்தேகிக்கத் தொடங்கியதால் அவனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்க முன்வராமல் தன் சந்தேகத்தையும் வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் மௌனமாக இருந்ததுடன் எதிலும் ஒதுங்கியிருப்பது போல நாடகமும் ஆடினார்.

சிங்க பரராஜசேகரின் இந்த நடத்தை பரநிருபசிங்கனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. சிம்மாசனத்தில் தான் அமர வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக மிக நுட்பமான முறையில் இரு இளவரசர்களையும் கொன்று அதற்கான பழியை சங்கிலியன் மீது வதந்தி மூலம் பரப்பித் தப்பித்துக் கொண்ட பரநிருபசிங்கன் சிங்க பரராஜசேகரனின் மௌனத்தைச் சகிப்பானா? தான் நினைத்ததெல்லாம் தரைமட்டமாகி விட்டதே என்பதை எண்ணிய பரநிருபசிங்கன் எந்தநேரமும் எதுவும் செய்யத் தயாரான நிலையிலேயே இருந்திருப்பான். அவ்வளவிற்கு பதவி வெறி பிடித்தவனாக அவன் இருந்தான். இதையொட்டி எழுந்த குழப்ப நிலையின் மத்தியிலேயே கலகத்தில் இறங்குவது போல் இறங்கி ஆட்சிபீடம் ஏறிக் கொண்டான் சங்கிலியன்.

தம்பியான சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறிக்கொண்டதைக் கண்டு தந்தையும் இதைத் தடுக்காமல் மௌனமாக இருப்பதைக் கண்டு "சங்கிலியன் எப்படி ஆட்சிபீடம் ஏறமுடியும்" எனக் கொக்கரித்தான் பரநிருபசிங்கன். அதைவிட அவனால் வேறெதுவும் செய்யமுடியவில்லை. சூராதிசூரன் என்ற பெயர் பெற்ற பரநிருபசிங்கன் சங்கிலியின் முன் சுண்டெலி போலானான்.

கும்பகோணத்தில் நடந்த குழப்பத்தின் போது அங்கு சென்று சோழ மன்னனின் சேனையைத் தன் வசப்படுத்தி போராடி சோழ மன்னனை சிறையிட்ட பரநிருபசிங்கனுக்கு சங்கிலியனிடம் தன் வீரத்தைக் காட்ட முடியவில்லை. சிங்கவாகுவின் கொலைக்குப் பின் பட்டஞ்சூட்டப்பட்ட பண்டாரம் யாழ்ப்பாண இராச்சியத்தின் அதிபதியாய் இருந்தபோது அவனுக்குக் கீழ் இராச்சியத்தின் இரண்டாவது அதிபதியாக தந்தை சிங்க பரராஜசேகரனால் ஆக்கப்பட்டவன்தான் பரநிருபசிங்கன். இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவிருந்த பரநிருபசிங்கனுக்கு சேனைகளிடம் நல்ல பரிச்சயம் இருந்திருக்க வேண்டும். அப்படியாயின் சேனைகளைத் திரட்டிக் கொண்டு சங்கிலியனுக்கு எதிராகக் கிளம்பியிருக்கலாம்; பரநிருபசிங்கனால் அதுவும் முடியவில்லை. இவைகளை நோக்கும்போது சேனைகளிடம் பரநிருபசிங்கனுக்கு ஆதரவு இருக்கவில்லை என்பதுடன் சங்கிலியன் மீது சேனைகள் விசுவாசமாக இருந்திருக்கின்றன என்பது நிரூபணமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் சட்டசம்பிரதாயங்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்து மன்னனின் வைப்பாட்டி மகனான சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறும்போது படை பட்டாளங்களும் அவனுக்கு ஆதரவாக நின்றிருக்கின்றன என்றால் பல கோணங்களிலிருந்தும் சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறுவதற்கு ஒத்தாசை இருந்திருக்கிறது. இராஜ வம்சத்தைச் சேர்ந்த வள்ளியம்மையின் மகனான பரநிருபசிங்கனுக்கு மக்கள் மத்தியிலும், சேனைகள் மத்தியிலும் இல்லாத மதிப்பு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த வைப்பாட்டியின் மகன் சங்கிலிக்கு இருந்திருக்கிறதென்றால் அதற்கான காரணம் என்ன?

இளவரசர்கள் இருவரின் கொலைகளுக்கும் பரநிருபசிங்கனே சூத்திரதாரி என்ற சந்தேகம் மக்களிடமும் சேனைகளிடமும் மெதுவாகப் பரவியிருக்க வேண்டும். இதன் காரணமாகவே பரநிருபசிங்கனால் மக்களையோ சேனைகளையோ திரட்டிக் கொண்டு சங்கிலியனை எதிர்க்க முடியவில்லை. இளவரசர்கள் இருவரின் கொலைகளுக்கும் சங்கிலியனே காரணம் என்ற வதந்தியை பரநிருபசிங்கன் பரப்பியிருந்த போதிலும் அது எவர் மத்தியிலும் எடுபடவில்லை என்பது இதனால் உறுதியாகவில்லையா?

சங்கிலியன் சுற்றவாளி என்று பறைசாற்றுவதற்கு இந்நிகழ்ச்சியே போதுமே. இதனாலன்றோ சங்கிலியன் சுலபமாக ஆட்சிபீடம் ஏறினான். அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண இராச்சியத்தின் சேனைகள் மாமன்னன் சிங்க பரராஜசேகரனுக்கு என்றும் விசுவாசமாக இருந்திருக்கின்றன. அதே சேனைகள் சங்கிலியன் மீது பற்றும் விசுவாசமும் வைத்திருக்கின்றனவென்றால் தந்தைக்கும் மகனுக்கும் இருந்திருக்கக்கூடிய இரகசிய ஒருமைப்பாடு இதன்மூலம் வெளிப்படவில்லையா? சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறியது பற்றி பரநிருபசிங்கன் பலவாறாகச் சிந்திக்காமல் இருப்பானா? அண்ணன் தான் இருக்க தம்பியவன் எப்படி சிம்மாசனம் ஏற முடியும் என்றும், இராஜகுமாரி மகன் நானிருக்க சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த வைப்பாட்டி மகன் சங்கிலியன் எப்படி அரியாசனத்தில் அமரமுடியுமென்றும் மனதிற்குள் வையாமலிருப்பானா? ஆனால் இளவரசர் இருவரின் கொலைகள் சம்பந்தமாகத் தன்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் சந்தேகம் ஏற்பட்டதாலேயே இப்படியெல்லாம் நடந்திருக்கிறதென்பதுதான் அவனது மனதின் பதிலாக இருக்கவேண்டும். இதன் காரணமாகவே "அண்ணன் நானிருக்க சங்கிலியன் எப்படி ஆட்சியிலமர முடியும்?" என்ற கொக்கரிப்புடன் பெட்டிப்பாம்பாகினான் பரநிருபசிங்கன். சங்கிலியன் ஆட்சிபீடம் ஏறிக் கொண்டதும் விரக்தி நிலையிலிருந்த பரநிருபசிங்கனை சங்கிலியன் அண்ணா என அழைத்து "நானும் நீயும் மோதிக் கொண்டால் இராச்சியத்தைக் கைப்பற்ற வல்லூறுகள் போல் வட்டமிடும் வன்னியரிடம் எமது நாடு விழுந்துவிடும். அவர்களை அடக்கவே நான் மன்னனானேன். எம் தந்தை உனக்குச் சொந்தமாக்கிய ஏழு கிராமங்களை உன் மகன் பரராஜசிங்கனைப் பராமரிக்கச் செய்து விட்டு என் கீழ் மந்திரியாகவிரு" என்றான்.

குற்றமனப்பான்மையுள்ளவன் தன்மானத்தையும் இழப்பான் என்பது போல் தம்பி சங்கிலியன் ஆட்சியின் மந்திரியாகவிருக்கச் சம்மதித்தான் அண்ணனான பரநிருபசிங்கன். இராச்சிய வருமானத்தில் சரிபாதி பங்கையும் தருவதாகச் சங்கிலியன் பரநிருபசிங்கனிடம் கூறியிருந்தான். இது சிங்க பரராஜசேகரனின் இரகசிய ஏற்பாடாகவிருக்க வேண்டும். ஏனெனில் சங்கிலியும் பரநிருபசிங்கனும் சிங்க பரராஜசேகரனின் மைந்தர்கள் தானே.

ஆனாலும் பரநிருபசிங்கன் ஒரு விஷப்பாம்பிற்குச் சமமானவன். குற்றச்செயல் புரிந்ததால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையின் நிமித்தம் தம்பியான சங்கிலியனுக்குக் கீழ் மந்திரியாகவிருக்கப் பரநிருபசிங்கன் ஒத்துக்கொண்ட போதிலும் சங்கிலியனுக்கு எவ்வகையிலேனும் சதி செய்ய வேண்டுமென்ற தீய மனப்பான்மையுடனேயே இருந்திருக்கின்றான். ஆட்சியில் ஒட்டியிருந்தால்தான் சங்கிலியனுக்கு எதிரான பிரச்சாரங்களையும், எதிர் நடவடிக்கைகளையும் செய்யலாமென்பதும் அவனது எண்ணமாகவிருந்திருக்கிறது. இக் காரணத்தினாலும் தான் பரநிருபசிங்கன் மந்திரியாகவிருக்கச் சம்மதித்தான் என்றாலும் மன்னன் சங்கிலியன் லேசுப்பட்டவனல்லவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம்

# சங்கிலி அரண்மனை பாதுகாக்கப்படுமா?

ம.க.அ. அந்தனிசில்

பல நாடுகளிலும் பண்டைய மன்னர்களின் அரண்மனைகள், சரித்திரச் சான்றுகளாகவும் புராதனச் சின்னங்களாகவும் பாதுகாக்கப் படுகின்றன.

ருஷியா, பிரான்ஸ் போன்ற முன்னேற்ற நாடுகளில் கூட அரச வம்சத்தின் மாளிகைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டுப் பொதுமக்களின் பார்வைக்காகவும் திறந்து விடப்பட்டுள்ளன.

காரணம் - இவையெல்லாம் சரித்திரச்சான்றுகள் என்ற முக்கியத்தினாலன்றோ?

ஏனெனில், மன்னர் காலங்களில் வாழ்ந்திருக்கமுடியாத இன்றைய மக்களுக்கு அழிந்தும் அழியாத நிலையிலும் ஆதாரபூர்வமாகக் காட்சி தந்து சரித்திரத்தைக் கண்முன் நிலைநிறுத்துவது இப் பழங்கால அரண்மனைகளல்லவா?

ஆம் - நேற்றைய நிகழ்ச்சி இன்றைய சரித்திரமாகிறது. இன்றைய நிகழ்ந்சி நாளைய சரித்திரமாகிறது.

பிறநாடுகளில் மட்டுமல்ல, இலங்கைத் தீவிலும் அனுராதபுரி, பொலன்னறுவை, கண்டி ஆகிய இடங்களில் சிங்கள மன்னர்களின் அரண்மனைகள் அமைந்திருந்த இடங்கள் அரசினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த இடங்கள் யாருக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாண மன்னர்கள் வாழ்ந்த அரண்மனையும் அதன் சுற்றுப்புறங்களும் இன்று எதிர்நோக்கும் நிலை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் இராஜதானி நல்லூராகும். தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்டார்கள் என்பதற்கு நல்லூரிலிருக்கும் அரசமாளிகை மறுக்கமுடியாத சான்றாகும். இந்த அரசமாளிகை சங்கிலியன் அரண்மனையென்று கூறப்படுகிறது.

போர்த்துக்கேயப் பறங்கியரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த போது யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் சங்கிலியாவான். அவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனுமாவான்.

அந்தகனான யாழ்பாடி வீரராகவனுக்கு பரிசாக வழங்கப்பட்ட "மணல்திடல்" பின்னர் யாழ்ப்பாணம் என வழங்கலாயிற்று. கவி வீரராகவன் யாழ்ப்பாணத்தை ஆண்டு வயோதிபனாக இறந்தபின் அவனுக்கு வாரிசு இல்லாமையால் யாழ்ப்பாணம் சில காலம் தளம்பியும் குழம்பியும் கொண்டிருந்தது.

இச் சேதியை சோழநாட்டிற்கு எடுத்துச் சென்ற பொன்பற்றியூர் பாண்டிமளவன் என்னும் ராஜப்பிரதானி மாருதப்புரவல்லியின் மகன் முறையும், திசையுக்கிரசோழன் மகன் சிங்குதுவின் மருமகனுமான சிங்கையாரியன் எனும் இராசகுமாரனை யாழ்ப்பாணத்தை வந்து ஆளும்படி வேண்டிக்கொள்ள சிங்கையாரியன் மறுக்காது புவனேகபாகு என்னும் மந்திரியையும், வேதியர் குலத்துங்கனான கங்காதரக்குருக்களையும் அழைத்துக்கொண்டு தன் பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் வந்திறங்கி நல்லூரில் தன் அரசிருக்கையை அமைத்தான்.

அவன் நல்லூரில் மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கட்டுவித்து பூங்காவையும், பூங்காவின் நடுவே குளியல் மண்டபமும் முப்புடைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்தில் யமுனைநதித் தீர்த்தத்தைக் கலந்துவிடச் செய்து, நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரருக்கான இருப்பிடங்களையும் கட்டுவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார் கோவிலையும், மேல்திசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும், வடதிசைக்கு சட்டநாதீஸ்வரன் கோவிலையும் கட்டுவித்தவனும் அவனே! அவனது வம்சமே வழிவழியாக யாழ்ப்பாணத்தை ஆண்டது.

சிங்கையாரியன், குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கை யாரியன், குணபூஷண சிங்கையாரியன், வீரோதய சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன், பரராசசேகரம், பண்டாரம், சங்கிலி ஆகியோரே யாழ்ப்பாண அரசின் மன்னர்களாவார்கள்.

யாழ்ப்பாண மன்னர்களில் செயவீர சிங்கையாரியன் போன்றோர் இலங்கைத்தீவு முழுவதையும் ஆண்டுள்ளார்கள். இதுமட்டுமல்ல சில யாழ்ப்பாண மன்னர்கள் சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும் யாழ்ப்பாண அரசுக்கு திறை செலுத்தவும் வைத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்து கடைசி மன்னனான சங்கிலி போர்த்துக்கேய பறங்கியருடன் மும்முறை போரிட்டு இவர்களைப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்தான். வியாபாரத்துக்கு வந்த பறங்கியர்கள் நாடு பிடிக்கத் திட்டம் தீட்டவே போர்க்களத்தில் சந்தித்து அவர்களை விரட்டினான் சங்கிலி.

நல்லூர் வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்பாக இருந்த பரந்த வெளியிலேயே போர் நடைபெற்றது. இன்று அப்பரந்த வெளி தெருக்களாலும் வீடுகளாலும் மறைந்து விட்டது.

காக்கை வன்னியனாலும் தம் ஒன்றுவிட்ட சகோதரன் பரநிருபசிங்கத்தாலும் உருவாக்கப்பட்ட சதியின் காரணமாகவே சங்கிலி மன்னன் பறங்கியரிடம் பிடிபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர்
**ம. க. அ. அந்தனிசில்** பற்றி...

மரியாம்பிள்ளை கதிர்காமர் அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதி யினரின் மூத்தபுதல்வரான திரு.அந்தனிசில் அவர்கள் (1934-2005) யாழ்ப்பாணம் டேவிட்வீதியைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழையமாணவர். தற்போது மன்னாரில் ஆயராக இருக்கும் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுடன் ஒன்றாகக் கற்றவர். தமிழ்நாடு சென்றும் கற்றவர். இடதுசாரிச் சிந்தனையாளர். தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் பெரியாரின் 'நாத்திகம்' பத்திரிகையின் துணையாசிரியராகவும் இருந்தவர்.

இலங்கையில் 'தீப்பொறி', 'பல்கலை', 'ஒருதீப்பொறி' எனும் பத்திரிகை களைச் சொந்தமாக நடாத்தியவர். இலங்கைப் பத்திரிகைகளான ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி, தினகரன், சுடரொளி ஆகிய பத்திரிகைகளில் வரலாறு, இலக்கியம், மொழிவழக்காறுகள் தொடர்பாகப் பல பயனுள்ள கட்டுரைகளை எழுதியவர். பேச்சாளர், நடிகர், பாடகர், குத்துச் சண்டைவீரர் எனப் பன்முக ஆளுமை யுடையவர். பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்கள் இவரது யாழ்ப்பாணம் தொடர்பான வரலாற்றுக் கட்டுரையினைப் பாராட்டி எழுதியுள்ளார். "சொல் ஏர் உழவர்" என்பது இவரது பட்டப்பெயர்.

என்றும் தமிழ் வரலாற்றுப்
பாரம்பரியத்துடன்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org